Follow us:


# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 03, இதழ்: 173 சுபகிருது வருடம், மாசி மாதம் 08ஆம் திகதி திங்கட்கிழமை (20.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 28, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50




## டெங்கு நோயால் மட்டக்களப்பில் இளைஞர் உயிரிழப்பு

ஒரே நாளில் 14 பேர் வைத்தியசாலையில்

02 பக்கம்

## தேர்தலை நிறுத்தும் முயற்சியா?

### சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சீர்குலைக்கும் அரச அதிகாரிகளின் முயற்சிகள் குறித்து தனது கவலையை வெளிப்படுத்திய இலங்கை சட்டத் தரணிகள் சங்கம், தேர்தல் நடைமுறையில் தலையிடுவதற்குப் பொறுப்பானவர்கள் அனைவரும் சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்ட இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், அனைத்து தேர்தல்களும் இலங்கையின் ஜனநாயக செயற்பாட்டின் இன்றியமையாத அங்கம் எனவும் அவை தடைப்படக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளது.

பொது நிதியை நிர்வகிப்பதை நோக்கமாகக்கொண்டதாகக் கூறப்படும் அரசாங்கத்தின் சமீபத்திய பல முடிவுகள், தேர்தல்களை நடத்துவதைத் தடுக்கும்... 02 பக்கம்

# நீர்க் கட்டணம் உயர்கிறது!

### குறிப்பிட்ட காலத்துக்குப் பொறுமை காக்குமாறு அமைச்சர் ஜீவன் மக்களிடம் வேண்டுகோள்



மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், நீர்க் கட்டணத்தையும் அதிகரிக்கவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக செலவை ஈடுசெய்யும் பொருட்டு இவ்வாறு நீர்க் கட்டணத்தை உயர்த்துவதற்கு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், அவ்வாறு உயர்த்தப்படும் நீர்க் கட்டணத்தை மக்கள் நலன்கருதி குறுகிய காலப்பகுதிக்குள் மீளக் குறைப்பதற்கான திட்டத்தை செயற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்ட காலத்துக்குப் பொறுமை காக்கவேண்டுமெனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், 02 பக்கம்



யாழ்ப்பாணம், நல்லூர் சிவன் ஆலயத்தில் சிவராத்திரி விரத பூஜைகள் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றன.

(படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

## வாக்குகளைப் பயன்படுத்தும் சூழல் அடுத்த வருடம் உருவாக்கப்படும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலம் அடுத்த வருடம் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி நாட்டில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி தமக்கு விரும்பும் எதிர்காலத்தை உருவாக்குவதற்கான சூழல் ஏற்படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீட்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளதாகவும், 02 பக்கம்

## நீதிமன்றத்தை நாடுகிறது தேர்தல் ஆணைக்குழு

### ஒத்துழைப்பு கிடைக்கவில்லையென நகர்த்தல் பத்திரம் தாக்கல்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் இன்று (20) நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்யவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தேர்தலை முன்னெடுக்க ஏனைய தரப்பினரிடமிருந்து... 02 பக்கம்

## மின்சார சபை அதிகாரிகள் தாக்கப்படலாம்

### தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

நா. தினுஷா

மின்கட்டணத்தை செலுத்த வேண்டாம் என்று நாங்கள் மக்களிடம் கோரப்போவதில்லை.

02 பக்கம்

## தேர்தல் பணி நேரத்துக்கு கட்டுப்பாடு விதித்து கடிதம்

### ஆணையாளர் அறிவுறுத்து

நா. தினுஷா

தபால்மூல வாக்களிப்புத் தினம், திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதால் அடுத்த நிர்வாக நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணையாளர் நாயகத்தினால் சகல மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள், சகல மாவட்டங்களுக்குமான... 02 பக்கம்

## இந்திய விசா நிலையம் இன்றுமுதல் இயங்கும்

தற்காலிகமாக மூடப்பட்ட கொழும்பிலுள்ள இந்திய விசா விண்ணப்ப நிலையம் இன்று திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, விசா மற்றும் பிற சேவைகளுக்கான விசா விண்ணப்ப மையம் இன்றுமுதல் வழமையாக இயங்குமென கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. பெப்ரவரி 15ஆம் திகதியன்று, இரவு எழுந்த பாதுகாப்புச் சிக்கல் காரணமாக, இந்திய விசா விண்ணப்ப மையம், மறு அறிவித்தல்வரை மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### உஷ்



ஜனாதிபதி ரணிலை சந்திப்பதற்கான நேரமொன்றை ஒதுக்கியுள்ளார் இந்திய பிரதமர் நரேந்திர மோடி. இன்னும் சில தினங்களில் இதற்காக புதுடில்லி செல்லவுள்ளார் ரணில். ரணிலுடன் அமைச்சர்கள் சிலரும் இந்தியா செல்லவுள்ளதாக தெரிகிறது.

## இலங்கைக் கடலில் இந்திய மீனவர்களுக்கு அனுமதி

### முன்மொழிவு தொடர்பில் ஆராய்வு

இலங்கைக் கடல் எல்லைக்குள்-பாக். ஜலசந்தியில்- தமிழக மீனவர்கள் குறைந்த இயந்திர திறன் கொண்ட படகுகளில் மீன்பிடிக்க அனுமதி வழங்குவதற்கான முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், நீண்டகாலமாக நிலவும் இலங்கை - இந்திய மீன்பிடி பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என கடற்றொழில் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீன்பிடித் தளங்களின் இருப்பிடம்,.... 02 பக்கம்

## தேர்தலை ஒத்திவைக்க கோரிய ரிட் மனு இன்று விசாரணைக்கு

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் ஒருவர் சமர்ப்பித்த ரிட் மனு இன்று (20) உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

எஸ். துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் குழு முன்னிலையில் குறித்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக... 02 பக்கம்

## தேர்தல் திகதி அடுத்தவாரம் அறிவிக்கப்படும் சாத்தியம்


நிதிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால், திட்டமிடப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய திகதியை அடுத்த வாரத்திற்குள் மறுபரிசீலனை செய்ய தேர்தல்கள் ஆணைக்குழு நிர்ப்பந்திக்கப்படும் - என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

திறைசேரியிடமிருந்து நிதியுதவியைப் பெறுவதற்கான தீர்விற்காக தேர்தல் ஆணைக்குழு காத்திருப்பதாக புஞ்சிஹேவா மேலும் கூறினார். 02 பக்கம்

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ள அனைத்து அரச பாடசாலைகளும் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைக்காக இன்று (20) திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளன.

மேலும், இன்று ஆரம்பமாகும்... 02 பக்கம்



# புதிய தேர்தல் முறைமை பற்றி ஆராய விசேட குழு

## இளைஞர்கள் குழு மத்தியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



தேர்தலின்போது வேட்பாளர் ஒருவர் அதிக பணம் செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்படாத வகையில் தேர்தல் முறையை உருவாக்குவது குறித்து ஆராய குழுவொன்று நியமிக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக இளைஞர் குழுவொன்றுடன் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்த சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் இந்த இளைஞர்கள் குழு நாட்டின் பிரதான நாளிதழ் ஒன்றில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்ததுடன், அது தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக அந்த கட்டுரையை எழுதி வெளியிட்ட இளம் ஊடகவியலாளர்களான அனுஷ்கா ஜெயசூரிய மற்றும் செனோன் சல்காது ஆகியோருடன் தன்னை சந்திக்க வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த இளைஞர் குழுவிற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பாராளுமன்றத்தினால் ஆராய முடியும் எனவும் அதற்காக பல குழுக்களை நியமித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குக்குழு மற்றும் பொது நிதிக்குழு உள்ளிட்ட மேலும் பல குழுக்கள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகளை மேலும் பலப்படுத்த பாராளுமன்ற வரவு - செலவுத்திட்ட அலுவலக சட்டமூலம் கொண்டு வரப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

புதிய வரிகள் காரணமாக வெளிப்படைத் தன்மை பாரிய பிரச்சினையாக காணப்படுவதாகவும், திடீரென தமது சம்பளத்தில் பெரும் பகுதியை செலுத்த வேண்டியிருப்பதனால் மக்கள் அதனை கடுமையாக உணர்ந்துள்ளதாகவும் இளைஞர் குழு, ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"பெரிய வரவு - செலவுத் திட்டத்தில் அனைத்தும் முறையாக ஒதுக்கப்படுவதால் வெளிப்படைத்தன்மை இருக்கிறது. எந்தவொரு வரவு - செலவுத் திட்டத்திலும், பணம் முறையாக செலவிடப்படுவதை பாராளுமன்றம் தான் உறுதி செய்கிறது. எனவே, பாராளுமன்றம் தனது அதிகாரங்களை இப்போதே பயன்படுத்த வேண்டும். கடந்த முறையும் மேற்பார்வைக் குழுக்களின் தலைவர் பதவிக்கான வெற்றிடங்களை எதிர்க்கட்சிகள் நிரப்பவில்லை. இம்முறை அவர்கள் தெரிவுக்குழுக்களின் செயற்பாடுகளுக்காக பாராளுமன்றத்திற்கு வரவில்லை. ஆனால் அதற்கு எதிர்க்கட்சியில் இருந்து சில பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. அதுதான் வெளிப்படைத்தன்மை. செலவுகள் மற்றும் ஏனைய விடயங்களைப் பற்றி நீங்கள் அவர்களிடம் கேட்கலாம் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

# கொழும்பில் இன்று போராட்டம்

ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்களை கண்டித்து இன்று கொழும்பில் பாரிய போராட்டமொன்றை நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

தபால்மூல வாக்களிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு ஒத்திவைத்ததை அடுத்து இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று பெரும் எண்ணிக்கையிலான மக்களுடன் கொழும்புக்கு வந்து அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராட்டம் ஒன்றை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாகவும் அதன் பின்னர் போராட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இதேவேளை, மின் கட்டண உயர்வுக்கு எதிராக இன்று (20) இரவு 7 மணிக்கு அனைத்து மின்விளக்குகளையும் அணைக்குமாறு மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் அனுருத்த சோமதுங்க கருத்து தெரிவிக்கையில்,

நாளை (இன்று) இரவு 7 மணிக்கு, டிப் சுவிட்ச் மூலம் உங்கள் வீட்டின் மின் அமைப்பை அணைக்கவும். மின் விளக்குகள், மின்சாதனங்களைப் பயன்படுத்துவதை நிறுத்தவும். உங்கள் வீட்டு மின் விளக்குகளை அணைக்கவும். இதன் விளைவை அடையாளப்பூர்வமாக பிரபலப்படுத்துவோம் எனத் தெரிவித்துள்ளார்.

## டெங்கு நோயால்...

*(கனகராசா சரவணன்)*

மட்டக்களப்பு ஏறாவூரில் டெங்கு நோய்த்தாக்கம் காரணமாக போதனா வைத்தியசாலையின் அவசரப் பிரிவில் சிகிச்சைப்பெற்று வந்த 22 வயது இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை (18) அதிகாலை உயிரிழந்துள்ளார். மேலும், மாவட்டத்தில் அன்றைய தினம் 14 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

ஏறாவூர் ஐயங்கேணி பாரதிகிராமத்தைச் சோந்த 22 வயதுடைய பகிரதன் தனுஷ்கரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் டெங்கு நுளம்பு தாக்கத்துக்குள்ளாகி செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 16ஆம் திகதி மட்டு. போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை(18) அதிகாலை 3 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, தற்போது விட்டு விட்டு மழை பெய்து வரும் காரணத்தால் டெங்கு நுளம்பு பெருக்கம் ஏற்பட்டுள்ளதுடன் வெள்ளிக்கிழமை மட்டும் டெங்கு நுளம்பு நோய்த்தாக்கத்தினால் களுவாஞ்சிக்குடியில் 2 பேரும், காத்தான்குடியில் ஒருவரும், செங்கலடியில் 2 பேரும், வாழைச்சேனையில் ஒருவரும், கோறளைப்பற்று மத்தியில் 4 பேரும் மட்டக்களப்பில் 4 பேர் உட்பட 14 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## நீதிமன்றத்தை...

போதுமான ஒத்துழைப்பு கிடைக்கவில்லையென குறிப்பிட்டு இந்த நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது. குறிப்பிட்ட திகதியில் தேர்தலை நடத்துவதாக உயர் நீதிமன்றில் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த நாட்களில் உறுதியளித்து உறுதிமொழியை நிறைவேற்ற முடியாமல் போனமையை சுட்டிக்காட்டி இந்த நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

## மின்சார சபை...

ஆனால் மின்துண்டிப்பை மேற்கொள்வதற்கு செல்லும் அதிகாரிகள் பொலிஸ், இராணுவ பாதுகாப்புடன் செல்ல வேண்டும். பாதுகாப்பின்றி சென்று ஏதேனும் தாக்குதல் இடம்பெற்றால் அதனை தொழிற்சங்கம் பொறுப்பேற்காது என்பதுடன் மின்கட்டண அறிக்கை வெளியிட செல்லும் அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று மின்சார சபையின் சேவையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் ரஞ்சித் ஜயலால் தெரிவித்தார்.

இனிமேல் அத்தியாவசிய சேவைகள் தொடர்பான சட்டங்களை ஏற்று செய்யப்படப்போவதில்லை. 22ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிராக கடும் எதிர்ப்பை வெளியிட்டு பாரிய தொழிற்சங்க நடவடிக்கையையும் ஆர்ப்பாட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளதாகவும் முடிந்தால் தடுக்குமாறு அரசாங்கத்துக்கு எச்சரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு நாங்கள் தொடர்ச்சியான எதிர்ப்பை வெளியிட்டிருந்தோம். இருந்தபோதும் அரசாங்கம் கடந்த 15ஆம் திகதி நள்ளிரவு முதல் மின்கட்டணத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ளது. இந்த கட்டண அதிகரிப்பு அநீதியானது என்பதை மற்றையவர்களை விட நாங்கள் நன்கறிவோம்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அநேகமான உறுப்பினர்களும் அமைச்சர்களும் அவர்களின் மின்கட்டணத்தை செலுத்துவதில்லை. நீர் கட்டணம் செலுத்துவதில்லை. இருந்தபோதும் மின்சார சபையோ அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனமோ அவர்களுக்கான மின் விநியோகத்தையோ நீர் கட்டணத்தையோ துண்டிப்பதில்லை. பொது மக்களின் மின்கட்டணத்தினூடாகவே அதனை நிவர்த்திக்கிறார்கள். அதன் காரணமாகவே, மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம் என்று கோரினோம். இது தேசிய குற்றமாகும். இந்நிலையில் மின்கட்டணத்தை அதிகரித்தது மாத்திரமின்றி கடந்த 15ஆம் திகதியில் இருந்து மின்துண்டிப்பையும் நிறுத்திவிட்டார்கள். உயர்தரப் பரீட்சை இடம்பெற்ற காலகட்டத்தில் மின்துண்டிப்பை மேற்கொள்ள வேண்டாம் என்று கோரியிருந்தோம். ஆனால் அதனை செய்ய முடியாது என்று திட்டவட்டமாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஓகஸ்ட் மாதம் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் மின்சார சபை ஊழியர்கள் தாக்கப்பட்டிருந்தார்கள். மின்கட்டணம் அறவிடும் அதிகாரிகளுக்கு உயிர் அச்சுறுத்தல் நிலைமை உருவாகியுள்ளது.

## இலங்கைக் கடலில்...

படகுகளின் எண்ணிக்கை, ஒழுங்குபடுத்தும் அதிகாரம் மற்றும் இலங்கை கடற்படை மற்றும் இந்திய கடலோர காவல்படையின் கூட்டு ரோந்து போன்ற முன்மொழிவுகள் தொடர்பான வழிமுறைகள் குறித்து இலங்கை - இந்திய கூட்டு செயற்குழு கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் இந்த நடைமுறை தடை செய்யப்பட்டுள்ளதாலும், நமது கடல் வளங்களுக்கு பெரும் சேதம் விளைவிப்பதாலும், எந்தச் சூழ்நிலையிலும், இந்திய அடிமட்ட இழுவை படகுகளை அனுமதிக்க மாட்டோம் என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். அதனடிப்படையில், இந்திய நாட்டுப் படகுகளை பரிசீலித்து வருகிறோம்" என்றும் அமைச்சர் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய நாட்டுப் படகு மீனவர்கள் பயன்படுத்தும் மீன்பிடி முறைகள், வலைகள் குறித்தும் கவலை தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின்படி, 50 குதிரை வலு இயந்திரத்தில், வாரத்தில் இரண்டு நாட்கள் தமிழக மீனவர்கள், இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடிக்க அனுமதியளிக்கப்படும்.

இந்த முன்மொழிவு முதலில் இந்திய தரப்பால் முன்வைக்கப்பட்டது என்றும், இலங்கை அரசாங்கத் தலைவர்கள் அதற்கு சாதகமாக பதிலளித்தனர் என்றும் அறிய வருகிறது.

இதற்கு வடக்கு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்பதை புரிந்து கொண்டு, அவர்களை சமரசப்படுத்தவும் நூதன முயற்சி இடம்பெறுகிறது. இதன்படி, இந்த திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதியை பொது திறைசேரிக்கு அனுப்புவதற்கு பதிலாக வடக்கு மீன்பிடி அபிவிருத்திக்கு பயன்படுத்த இலங்கை அதிகாரிகளால் முன்மொழியப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்தை பணயம் வைத்து ஒரு மணித்தியாலம் கூட வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டோம் என வடமாகாண மீனவர்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த வாரம் இந்திய இழுவை படகுகள் உள்ளூர் மீனவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு, தமிழகத்தின் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் குழு ஒன்று, இலங்கை மீனவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இனந்தெரியாத குழுவினரால் தாக்கப்பட்டதாக வியாழக்கிழமை கூறியது.

இதேவேளை, 11 மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை இழந்த உள்ளூர் மீனவர்களுக்கு இந்திய மீனவர்களால் ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு வழங்குமாறு காரைநகர் பிரதேச சபையின் தலைவர் கே.பாலச்சந்திரன் இந்த வாரம் இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் நுழைவது சட்டப்படி குற்றம் என்ற நிலையிலேயே இந்திய மீனவர்களின் அட்டகாசம் தாங்க முடியாமல் இலங்கை மீனவர்கள் அந்தரித்து வரும்நிலையில், அவர்களை மீன்பிடிக்க அனுமதிப்பது இலங்கை மீனவர்களை ஒரேயடியாக அடித்து வீழ்த்தும் செயலாகுமென வடக்கு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

## நீர்க் கட்டணம்...

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மாத்தளை பிரதேசத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மாத்தளை மாநகர மேயர் சந்தானம் பிரகாஷ் மற்றும் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சிவஞானம் ஆகியோரின் ஏற்பாட்டில் மக்கள் சந்திப்பு நேற்று (19) மாத்தளை நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.இராமேஷ்வரன், கட்சித் தலைவர்கள், அமைப்பாளர்கள் என பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

"நாட்டில் மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளது. இதனால் விரைவில் நீர் கட்டணத்தையும் அதிகரிக்க நேரிடும். ஏனெனில் பெரும்பாலான நீர்வழங்கல் திட்டங்கள் மின்சாரத்தில்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதனால் நீர்வழங்கல் பொறிமுறைக்கான செலவீனங்களும் அதிகரிக்கும். அதனை ஈடுசெய்வதற்காகவே கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டு மக்கள் படும் கஷ்டமும் எமக்கு புரிகின்றது. சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டப்பின்னர், சூரிய சக்திமூலம், நீர்வழங்கல் திட்டத்தை இயங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் செலவீனம் குறையும். நீர் கட்டணத்தையும் குறைக்கக்கூடியதாக இருக்கும்.

நாட்டில் கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவை இலவசமாக வழங்கப்படுகின்றன. அத்தியாவசிய சேவைகளை எவ்வித தடையுமின்றி செயற்படுத்த வேண்டுமானால் அதற்கு அரசுக்கு வருமானம் அவசியம். இப்படியான நெருக்கடி நிலையால்தான் வரிகள் அதிகரிக்கப்படுகின்றன. எனவே, நாட்டு நலன் மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி குறிப்பிட்ட காலத்துக்குள் பொறுமை காக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டின் தற்போதைய நிலைமை நிலையானது அல்ல. நெருக்கடி நிலை மாறும். அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, 1000 ரூபா சம்பள உயர்வின் பின்னர், தொழிற்சங்கங்களுக்கும், கம்பனிகளுக்கும் இடையில் முரண்பாடு நிலை ஏற்பட்டுள்ளது. இப்படி முரண்பட்டு பயணிக்கவும் முடியாது. கூட்டு ஒப்பந்தத்துக்கு வருகின்றோம் என கூறும் கம்பனிகள், முதுகுக்கு பின்னால் வேறொன்றை செய்கின்றன.

அரசுடன் பேச்சு நடத்தி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்குவதற்கு கம்பனிகளுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகின்றோம். இந்த வாய்ப்பை கம்பனிகள் தவறவிட்டால், நாம் சம்பள நிர்ணய சபைக்கு நிச்சயம் செல்வோம். இரண்டாயிரம் முதல் இரண்டாயிரத்து 500 வரை சம்பள உயர்வு கோரப்படும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேர்தலுக்கு அஞ்சவில்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தல் அல்ல ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத் தேர்தலே அவசியம். அதன்மூலமே மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றார்.

# செலான் வங்கி பீ.எல்.சி.

(2007 - 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9இன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 08ஆம் பிரிவின் கீழ் 2023/01/24ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது.

**கிளை** :- **செங்கலடி**
**கணக்கு இலக்கம்** :- **0980-11954276-001**

(2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ.இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு அருள்வாணி சுதர்சன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2022 மார்ச் 25ஆம் திகதியிடப்பட்ட 1138ஆம் இலக்க பிணைமுறியின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான/அடகுவைத்தவரான" ஏறாவூர் 01ஐச் சேர்ந்த **முகம்மது ஹனிபா முகம்மது அமிர் மறுபெயர் மொஹமட் ஹனிபா மொஹமட் அமிர்** என்பவரால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணை முறியின் மீது பெறப்பட்ட தவணைக் கடன் வசதிக்காக 2022 நவம்பர் 28ஆம் திகதிவரை அசல் மற்றும் வட்டித்தொகையாக ஆறு மில்லியன் நூற்று எண்பத்திரெண்டாயிரத்து தொள்ளாயிரத்து பதினேழு ரூபா எண்பத்தைந்து சதத் (ரூ.6,182,917.85) தொகையை மற்றும் 2022 நவம்பர் 29ஆம் திகதி தொடக்கம் ஆறு மில்லியன் இருபத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ.6,027,500.00) தொகை மீது பதினொன்று புள்ளி ஏழு ஐந்து வீத (11.75%) வருடாந்த வட்டியுடன் சேர்த்து செலான் வங்கி பீ.எல்.சீக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான ஆறு மில்லியன் நூற்று எண்பத்திரெண்டாயிரத்து தொள்ளாயிரத்து பதினேழு ரூபா எண்பத்தைந்து சதத் (ரூ.6,182,917.85) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2022 நவம்பர் 29ஆம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை மேல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொகையையும், விளம்பரச் செலவுகளையும் மற்றும் மேற்படி சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பி.எல்.சீயிடம் மேற்படி 1138ஆம் இலக்க பிணை முறியின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திருமதி சந்திமா கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபை 1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

**மேற் குறிப்பிடப்பட்ட ஆதன அட்டவணை**

1) மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம் மாத்தளை வடக்கு பிரிவின் கந்த பல்லே கோறளையின் கலேவல பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் வாகொல்லேயாய கிராம சேவகர் பிரிவிற்குள், ரன்வெடியாலவில் அமைந்துள்ள வாகொல்லயாய என அழைக்கப்படும் காணியானது உத்தரவுபெற்ற நில அளவையாளரான எல்.சிறிபால என்பவரால் 2018.12.21ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 5836ஆம் இலக்க நில வரைபடத்தின் **லொட் இல. 1** என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள மரங்கள், கட்டடங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அத்தோடு தற்போது இங்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் அனைத்து அசையும் மற்றும் அசையா இயந்திரத் தொகுதிகள் மற்றும் இயந்திரங்களுடன் அடுக்குமனை திட்ட வரைபடத்திற்கு மற்றும் அடுக்குமனை பிரகடனத்திற்கு அமைவான ஆனால், அதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத அதில் தற்போது அமைந்துள்ள அனைத்து பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், பொருத்துதல்கள் அல்லது நிர்மாணங்கள், அடுக்குமனை நிலத்தின் கூறுகள்/அலகுகள் உட்பட இதன் பின்னர் அமைக்கப்படவுள்ளவை அடங்கலான அனைத்தும் ஆகும்.

அதன் எல்லைகளாவன: **வடக்கு:** சலீமா உம்மா என்பவரால் உரிமை கோரப்படும் 2888ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் இல. 1 மற்றும் உத்தரவு பெற்ற நில அளவையாளரான எல். சிறிபால என்பவரால் தயாரிக்கப்பட்ட குறித்த 5836ஆம் இலக்க நில வரைபடத்தின் **லொட் இல. 2** **கிழக்கு:** ஆர்.எம்.கே.ஹன்சன ரணதுங்க என்பவரின் காணி மற்றும் உத்தரவு பெற்ற நில அளவையாளரான எல்.சிறிபால என்பவரால் தயாரிக்கப்பட்ட குறித்த 5836ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் இல. 3 **தெற்கு:** உத்தரவு பெற்ற நில அளவையாளரான எல். சிறிபால என்பவரால் தயாரிக்கப்பட்ட 4091ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் இல. 2 **மேற்கு:** தொரகொட்டுவே கும்புர ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த காணியின் பரப்பளவானது **இரண்டு ஏக்கர் இருபத்தெட்டு புள்ளி ஐந்து பேர்ச் (ஏ.2-றூ.0-பே.28.5) அல்லது 0,8815 ஹெக்டயர்** ஆகும்.

2) மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம் மாத்தளை வடக்கு பிரிவின் கந்த பல்லே கோறளையின் கலேவல் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் வாகொல்லேயாய கிராம சேவகர் பிரிவிற்குள், ரன்வெடியாவவில் அமைந்துள்ள வாகொல்லயாய என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எல்.சிறிபால என்பவரால் 2018.12.21ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 5836ஆம் இலக்க நில வரைபடத்தின் **லொட் இல. 2** என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள மரங்கள், கட்டடங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அத்தோடு தற்போது இங்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் அனைத்து அசையும் மற்றும் அசையா இயந்திரத் தொகுதிகள் மற்றும் இயந்திரங்களுடன் அடுக்குமனை திட்ட வரைபடத்திற்கு மற்றும் அடுக்குமனை பிரகடனத்திற்கு அமைவான ஆனால் அதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத அதில் தற்போது அமைந்துள்ள அனைத்து பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் பொருத்துதல்கள் அல்லது நிர்மாணங்கள் அடுக்குமனை நிலத்தின் கூறுகள்/அலகுகள் உட்பட இதன் பின்னர் அமைக்கப்படவுள்ளவை அடங்கலான அனைத்தும் ஆகும். அதன் எல்லைகளாவன: **வடக்கு:** வாகொல்லேயாயவிலிருந்து வீடுகளுக்குச் செல்லும் பாதை **கிழக்கு:** குறித்த 5836ஆம் இலக்க நிலவரைபடத்தின் லொட் இல. 3 **தெற்கு:** குறித்த 5836ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் இல. 1. **மேற்கு:** சலீமா உம்மா என்பவருக்குச் சொந்தமான 2888ஆம் இலக்க நில வரைபடத்தின் , லொட் இல. 1 ஆகிய எல்லைகளைக்கொண்ட குறித்த காணியின் பரப்பளவானது **ஒன்று புள்ளி ஒன்று பேர்ச் (ஏ.0-றூ.0-பே.1.1) அல்லது 0.0029 ஹெக்டயர்** ஆகும்.

3) மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம் மாத்தளை வடக்கு பிரிவின் கந்த பல்லே கோறளையின் கலேவல பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் வாகொல்லேயாய கிராம சேவகர் பிரிவிற்குள், ரன்வெடியாவவில் அமைந்துள்ள வாகொல்லயாய என அழைக்கப்படும் காணியானது உத்தரவுபெற்ற நில அளவையாளரான எல். சிறிபால என்பவரால் 2018.12.21ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 5836ஆம் இலக்க நில வரைபடத்தின் **லொட் இல. 3** என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள மரங்கள், கட்டடங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அத்தோடு தற்போது இங்கு களஞ்சிய்ப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் அனைத்து அசையும் மற்றும் அசையா இயந்திரத் தொகுதிகள் மற்றும் இயந்திரங்களுடன் அடுக்குமனை திட்ட வரைபடத்திற்கு மற்றும் அடுக்குமனை பிரகடனத்திற்கு அமைவான ஆனால் அதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத அதில் தற்போது அமைந்துள்ள அனைத்து பயிர்ச்செய்கைகள் கட்டிடங்கள் பொருத்துதல்கள் அல்லது நிர்மாணங்கள் அடுக்குமனை நிலத்தின் கூறுகள்/அலகுகள் உட்பட இதன் பின்னர் அமைக்கப்படவுள்ளவை அடங்கலான அனைத்தும் ஆகும். அதன் எல்லைகளாவன: **வடக்கு:** வாகொல்லேயாயவிலிருந்து வீடுகளுக்குச் செல்லும் பாதை **கிழக்கு:** ஹன்சன ரணதங்க என்பவரின் காணி **தெற்கு:** குறித்த 5836ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் இல. **1 மேற்கு:** குறித்த 5836ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் இல. 2 ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த காணியின் பரப்பளவானது **ஒன்று புள்ளி எட்டு பேர்ச் (ஏ.0-றூ.0-பே.1.8) அல்லது 0,0046 ஹெக்டயர்** ஆகும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**(திருமதி) வீ.ஏ. பரணகம**
**சட்டத்தரணி,**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்**

## வாக்குகளைப்...

நாட்டை அராஜகத்திற்குள் தள்ள இடமளிக்காமல் சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்றுமுன்தினம் (18) முற்பகல் நடைபெற்ற இலங்கை மற்றும் மாலைதீவுகளை உள்ளடக்கிய ரொட்டரி கழகத்தின், மாவட்ட இலக்கம் 3220 ஏற்பாடு செய்த 32ஆவது ரொட்டரி மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் விரைவில் வழமைக்குத் திரும்பும் என்று நம்பிக்கை தெரிவித்த ஜனாதிபதி, இந்த வருட இறுதிக்குள் நாட்டில் ஜனநாயகம் தளராமல் செயற்படும் சமூகம் கட்டியெழுப்பப்படும் என்றும் உறுதியளித்தார்.

அத்துடன், நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்த்துவிட்டு மக்கள் துன்பப்படுவதற்கு இடமளிக்கப்படப்போவதில்லை என வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்கான சகல தீர்மானங்களையும் அரசாங்கம் மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

தான் ஜனநாயகத்தை மதிக்கும் தலைவர் என்றும், ஆனால் ஜனநாயகத்திற்கு முதலில் பொது அமைதி தேவை என்றும், அதற்கு சட்டம், ஒழுங்கை பேணுவது அவசியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

ஒரு நாட்டில் சட்டம், ஒழுங்கு இல்லாமல் ஜனநாயகம் இருக்க முடியாது எனவும், ஜனநாயகத்திற்கு நிலையான பொருளாதாரம் அவசியம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சட்டம், ஒழுங்கு மற்றும் பொருளாதார மீட்சி இல்லாத நாட்டில் அராஜகமே தவிர ஜனநாயகம் இல்லை எனவும், நாட்டை அராஜக பாதைக்கு செல்ல ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்த ஜனாதிபதி, அராஜகத்தின் கீழ் நிலைக்கு கொண்டு செல்வதற்கு தான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

போலியோ தடுப்புப் பிரசாரம், சுனாமி மற்றும் மருந்து தட்டுப்பாடு மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி போன்றவற்றுக்கு காலத்தில் முகங்கொடுக்க நேரிட்டது. இந்த நெருக்கடிகளின்போது ரொட்டரி கழகம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவை ஜனாதிபதி பாராட்டினார்.

## பாடசாலைகள்...

மூன்றாம் தவணையின் மூன்றாம் கட்டம், எதிர்வரும் மார்ச் 24ஆம் திகதிவரை தொடரும் என்றும், 2023ஆம் ஆண்டின் முதலாம் தவணை மார்ச் 27ஆம் திகதி முதல் தொடங்கும் என்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், முதலாம் தர மாணவர்களுக்கான புதிய பாடசாலை தவணை, முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை கடந்த 17ஆம் திகதி நிறைவடைந்ததோடு, உயர்தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் காலங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. மதிப்பீட்டு பணிகளுக்கான திகதி நிர்ணயம் செய்யப்பட்டவுடன், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளின்போது எந்தெந்த பாடசாலைகள் திறக்கப்படும் அல்லது மூடப்படும் என்பதை பரீட்சைத் திணைக்களம் அறிவிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலை ஒத்திவைக்க...

உயர் நீதிமன்ற வழக்குகள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு கடந்த 10ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்கப்பட்டபோது, அடுத்தகட்ட பரிசீலனைக்காக 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. எனவே, குறித்த மனுவை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் அழைக்குமாறு கோரி கோர்னல் தனது சட்டத்தரணிகள் ஊடாக மனுவொன்றை தாக்கல் செய்தார்.

அதன் பின்னணியில், இது தொடர்பான மனுவை இன்று பரிசீலிக்க உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

## தேர்தலை நிறுத்தும்...

வகையில் விளைவைக் கொண்டிருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டது.

வாக்குச்சீட்டுகள் அச்சடிக்கப்படுவதற்கு முன்னதாக நிதியை விடுவிக்குமாறு அரசாங்க அச்சகத்தின் கோரிக்கையும், தேர்தல்களுக்காக 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், தேர்தலுக்கு நிதி இல்லை என்று திறைசேரியின் செயலாளரின் அறிவிப்பும் இதில் அடங்கும்.

திறைசேரியின் செயலாளர், அரசாங்க அச்சக அதிகாரி, ஏனைய அரசாங்க அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களின் செயற்பாடுகள் தேர்தலை நிறுத்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சியை தெளிவாக வெளிப்படுத்துவதாகவும், இதனால் மக்களின் இறையாண்மை, மக்களின் வாக்குரிமையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியதாகவும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சட்டத்தால் கட்டாயப்படுத்தப்பட்ட தேர்தல்களைத் தடுப்பதற்கான இத்தகைய முயற்சிகள் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் மீது முன்னோடியில்லாத தாக்குதலைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன மற்றும் எதிர்காலத்தில் தேர்தல் செயல்முறைக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் செல்வாக்கற்ற நிறைவேற்று அதிகாரம் அல்லது சட்டவாக்க சபைக்கு தேர்தலுக்கான வளங்களை ஒதுக்குவதை தடுக்கும் அபாயகரமான முன்னுதாரணமாக அமையும் என்றும் இலங்கை மக்கள் தமது பிரதிநிதிகளையும் தலைவர்களையும் தெரிவு செய்வதிலிருந்து தடுக்கலாம் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

## தேர்தல் திகதி...

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தலைமையில் திறைசேரி அதிகாரிகளை தேர்தல் ஆணைக்குழு வெள்ளிக்கிழமை சந்தித்தது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தொடர்ச்சியான நிதியை உறுதிசெய்ய முடியாது என திறைசேரி அதிகாரிகள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளனர்.

வெள்ளியன்று நடந்த கூட்டத்தின்போது, திறைசேரி அதிகாரிகள் பெப்ரவரி 13 திகதியிட்ட அமைச்சரவை பத்திரத்தின் நகலை தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைத்தனர்.

'எதிர்பார்க்கப்பட்ட அரசாங்க வருவாயை வைத்து அத்தியாவசிய பொது சேவைகளை நிர்வகித்தல்' என்ற அந்த அமைச்சரவை பத்திரம் நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியால் அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்தார். அதில், பெப்ரவரி மாத இறுதிக்குள் அரச வருவாயில் ஓரளவு உபரியாக இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவின்படி, வருவாய் ஐந்து முக்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மட்டுமே பயன்படுத்தப்படும்.

அத்தியாவசிய செலவினங்களின் கீழ் இதுபோன்ற உபரி வருவாயை தேர்தல் ஆணைக்குழுவுக்கு விடுவிப்பது குறித்த முடிவை நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி விக்கிரமசிங்க எடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய ஏதேனும் வழி உள்ளதா என திறைசேரி அதிகாரிகள் இன்று மீண்டும் கூடி ஆய்வு செய்யவுள்ளனர்.

அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அவர்களின் கைகள் கட்டப்பட்டுள்ளதாக திறைசேரியின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். "நாங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்மொழியலாம், ஆனால் இறுதியில், தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஏதேனும் உபரி நிதியை விடுவிப்பதற்கான முடிவு அவருடையது."

திறைசேரியிடமிருந்து சாதகமான பதிலை தேர்தல் ஆணைக்குழு இன்னும் எதிர்பார்க்கிறது என்று புஞ்சிஹேவா கூறினார்.

## தேர்தல் பணி...

பிரதி மற்றும் உதவி தெரிவத்தட்சி அதிகாரிகளுக்கும் கடிதமொன்றை அனுப்பி ஆலோசனை திட்டமொன்றை வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் அடிப்படையில், இன்று திங்கட்கிழமை முதல் அனைத்து ஊழியர்களுக்கும் சாதாரண அலுவலக நேரம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தேர்தல் கடமைகளுக்கான மேலதிக நேர வேலைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பிரதான அலுவலகம் உட்பட அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களும் வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்களில் மூடப்பட வேண்டும் எனவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வார இறுதி நாட்களிலோ அல்லது விடுமுறை நாட்களிலோ ஏதேனும் விசேட கடமைக்காக அலுவலகத்தை திறப்பது அவசியமானால், தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பணியில் இருக்கும் தற்காலிக உதவியாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்களின் சேவைகள் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும்.

ஊழியர்களின் போக்குவரத்துக்காக பல்வேறு நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட அனைத்து வாகனங்களும் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தற்காலிகமாக விடுவிக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலுவலகங்களின் பாதுகாப்புக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் தொடர்பான அறிவிப்பு எதிர்வரும் சில தினங்களில் வெளியிடப்படுமெனவும் அதுவரை பொலிஸ் பாதுகாப்பை தொடர்ந்து பெற்றுக்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையாளர் நாயகம் அறிவித்திருக்கிறார்.

# சட்டவிரோதமான வாகன உதிரிப்பாகங்கள் அழிப்பு

சட்டவிரோதமான முறையில் கடந்த 5 வருடங்களில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வாகன உதிரிப்பாகங்களின் ஒருதொகை இன்று (20) ஒருகொடவத்தை கொள்கலன் முனையத்தில் அழிக்கப்படவுள்ளது. சுங்கத் திணைக்களத்தின் விசாரணைக்குப் பின்னர் இந்த வாகன உதிரிப்பாகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அந்த திணைக்களத்தால் கைப்பற்றப்பட்ட இத்தகைய உதிரிப்பாகங்கள் பெருமளவில் உள்ளன. அவற்றில் சுமார் 100 பாகங்கள் ஆரம்ப கட்டமாக அழிக்கப்படுகின்றன.

பிற பொருட்களை இறக்குமதி செய்வதாகக் கூறி, இந்த உதிரிப்பாகங்கள் போலி ஆவணங்களை தயாரித்து இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன.

இந்த உதிரிப்பாகங்கள் சந்தையில் வெளியிடப்பட்டால், தரமற்ற வாகனங்கள் கூட்டிணைக்கப்படும் அபாயம் உள்ளது.

இதன் காரணமாக உதிரிப்பாகங்களை அழிக்க நடவடிக்கை எடுப்பதாக சுங்கத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# மத்தல விமான நிலையத்தின் செயற்பாட்டுச் செலவுகள் அதன் வருமானத்தை விட 21 மடங்கு அதிகம்

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

மத்தல சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டுச் செலவுகள் அதன் வருமானத்தை விட 21 மடங்கு அதிகமென தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளிப்படுத்தியுள்ளது.

வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் 2021ஆம் ஆண்டறிக்கை தொடர்பான ஆய்வறிக்கையை முன்வைத்து தேசிய கணக்காய்வு அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

2017 முதல் 2021ஆம் ஆண்டுவரை மத்தல சர்வதேச விமான நிலையத்தின் நிகர நஷ்டம் 20.59 பில்லியன் ரூபாவாகுமென குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்தல சர்வதேச விமான நிலையத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த பயணிகள் கொள்ளளவு ஒரு மில்லியனாகக் காணப்பட்ட போதிலும், கடந்த 5 வருடங்களுக்குள் 91 ஆயிரத்து 747 பயணிகள் மாத்திரமே இதனூடாகப் பயணித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான காரணங்களால் மத்தல சர்வதேச விமான நிலையத்தின் கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்பட்ட நிதி வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்படவில்லையென தேசிய கணக்காய்வு அலுவலகம் அதன் ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, இரத்மலானை விமான நிலையமும் தொடர்ச்சியாக நட்டத்தை சந்தித்து வருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2017 முதல் 2021ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குள் இந்த விமான நிலையத்தின் ஊடாக 1,693 மில்லியன் ரூபாவுக்கும் அதிக நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிவனொளிபாதமலைக்கு யாத்திரை வந்த யாத்திரிகர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்

(தலவாக்கலை நிருபர்)

சிவனொளிபாதமலைக்கு வழிபட நேற்று முன்தினம் (19) உட்பட கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அதிகளவான யாத்திரிகர்கள் வருகை தந்தமையால் பெரும்பாலானோருக்கு அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாக நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.

ஹட்டன் - நல்லதண்ணி வீதியில் அதிகளவான யாத்திரிகர்களின் வருகை அதிகரித்தமையால் பெருமளவிலான யாத்திரிகர்கள் சிவனொளிபாதமலைக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. யாத்திரிகர்கள் நல்லதண்ணியிலிருந்து சிவனொளிபாதமலை வரை பயணிக்க 12 மணித்தியாலங்களுக்கு மேல் செலவிட்டதாகவும், பெருமளவான யாத்திரிகர்கள் சீதங்குள பகுதியிலிருந்து இடைநடுவே திரும்பிச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடும் போக்குவரத்து நெரிசல் காரணமாக குறிப்பிட்ட சில யாத்திரை ஸ்தலங்களில் மக்கள் தொலைந்துபோகும் சம்பவங்களும், சில யாத்திரிகர்களின் பணப்பைகள் மற்றும் தங்க உடமைகளை இழந்த சம்பவங்களும் அதிகம் இடம்பெற்றுள்ளன. பாடசாலை விடுமுறை மற்றும் வார இறுதி சனி, ஞாயிறு விடுமுறைகள் காரணமாக பெருமளவான யாத்திரிகர்கள் சிவனொளிபாதமலையை தரிசிக்க வந்துள்ளதாகவும் அவர்கள் தாங்கள் எதிர்பார்க்காத பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

சிவனொளிபாதமலைக்கு பெருமளவான யாத்திரிகர்கள் வருகைதந்தமையால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாக மஸ்கெலியா பிரதேச சபையின் தலைவர் சண்முகம் செம்பகவள்ளி தெரிவித்தார்.

# கடன் மறுசீரமைப்பு - மலையக தமிழர் குறித்து பிரான்ஸ் தூதுவருடன் மனோ எம்.பி. சந்திப்பு

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் பிரான்கொயிஸ் பேச்லட்டை தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. சந்தித்துள்ளார். இதன்போது கூட்டணி சார்பாக நுவரெலியா மாவட்ட எம்.பி. உதயகுமார் மற்றும் பிரான்ஸ் தூதரகம் சார்பாக நயன கணேசன் ஆகியோரும் உடனிருந்துள்ளனர்.

பிரான்ஸ் தூதரகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பு பற்றி மனோ கணேசன் எம்.பி. கூறியதாவது,

இலங்கை அரசியல் பரப்பில் இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்கள் தொடர்பில் அறிவதில் தற்போது சர்வதேச சமூகம் காட்ட தொடங்கியிருக்கும் விசேட அக்கறையை நாம் மீண்டும் கோரிக்கைகளை விடுத்து உருவாக்கியுள்ளோம்.

இதன் வெளிப்பாடாகவே பிரான்ஸ் தூதுவர்



ஜீன் பிரான்கொயிஸ் பேச்லட் உடனான இந்த நட்பு ரீதியான சந்திப்பு நடைபெற்றது. மிகவும் அக்கறையுடன் இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசியல், சமூக, பொருளாதார சவால்கள் தொடர்பில் தூதுவர் பிரான்கொயிஸ் கேட்டறிந்துகொண்டார். இனிமேல் பிரான்ஸ் குடியரசின் இலங்கை தொடர்பான கொள்கையில் இங்கு வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்களுக்கும் உரிய இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதான ஒரு நாடான பிரான்ஸ், இலங்கையின் இன்றைய கடன் சீரமைப்பு முயற்சிகளுக்கு எந்தளவு ஒத்துழைப்பு வழங்குகிறது என்பது பற்றியும், தூதுவர் பிரான்கொயிஸ் எமக்கு விளக்கிக் கூறினார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி தொகுத்துள்ள மலையக மக்களின் அரசியல் அபிலாஷை ஆவணத்தில் இடம்பெற்றுள்ள 'நிலவரம்பற்ற சமூக சபை' தொடர்பில் பிரான்ஸின், அதேபோல் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுபவங்களை பகிர்ந்துகொள்வது தொடர்பில் நமக்கிடையே மேலும் உரையாடல்களை முன்னெடுக்கவும் தூதுவர் பிரான்கொயிஸ் தனது அக்கறையையும், ஆர்வத்தையும் வெளிப்படுத்தினார்.



சிவராத்திரியை முன்னிட்டு நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை முதல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வந்தன. விரத நிறைவையொட்டி, நேற்றுக் காலை (19) விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அம்மன் சமுத்திரத்தில் தீர்த்தமாடினார்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் மாசி மாதம் 08ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** தொழில், வியாபார லாபம், எதிர்பாராத பயணத்தால் நன்மை உண்டு.

**ரிஷபம்:** நண்பரிடம் கேட்ட உதவி தடையின்றி கிடைக்கும், தொழில் முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்:** வீண் குழப்பத்தால் உடல், மனம் கெடலாம். மறைமுக விரோதிகளின் தொல்லை உண்டு.

**கடகம்:** தொழில் விடயத்தில் கவனமாக இருக்கவேண்டும், வீண் பழி வரலாம், உடல் நோய்கள் கவனம்.

**சிம்மம்:** விருந்துபசாரத்தில் கலந்துகொள்வீர்கள், மனைவியால் அதிக நன்மைகளைப் பெறுவீர்கள்.

**கன்னி:** புது நண்பர்கள் அறிமுகமாவார்கள், பகைவர்கள் விலகிச் செல்வார்கள்.

**துலாம்:** பயணங்களில் இடையூறு ஏற்படும், உடல் நோய்களை அசட்டை செய்யாதீர்கள்.

**விருச்சகம்:** யாரையும் நம்பமுடியாமல் தவிப்பீர்கள், எதிர்கால வாழ்விற்கு திட்டமொன்றைத் தீட்டுவீர்கள்.

**தனுசு:** இன்ப அனுபவங்களால் மகிழ்ச்சியும். முயற்சிகளில் வெற்றியும் கிட்டும்.

**மகரம்:** பணம், பொருள் விரயமாவதை தடுக்க முடியாது, நினைத்த காரியங்கள் சற்று தாமதமாகி நடக்கும்.

**கும்பம்:** மனதில் ஒருவித படபடப்புத் தன்மை இருக்கும், வீண் வம்புச் சண்டைகள் வேண்டாம்.

**மீனம்:** வீண் பணவிரயமும் மருத்துவச் செலவுகளும் ஏற்படும், கோபத்தை குறைத்துக்கொள்வது நல்லது.

| | |
|---|---|
| திதி | : அமாவாசை பி.ப 12.35 வரை பின் பிரதமை |
| நட்சத்திரம் | : அவிட்டம் மு.ப.11.46 வரை பின் சதயம் |
| யோகம் | : சித்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| வார சூலை | : வடமேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | : பி.ப. 12.29 – 1.29 மணி வரை |
| ராகு காலம் | : 7.59 – 9.29 மணி வரை |
| எமகண்டம் | : 10.59 – 12.29 மணி வரை |
| குளிகை | : 1.59 – 3.29 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : கடக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தன அதிஷ்டம் | : ரோஹிணி, அத்தம், திருவோணம் (பிறந்தவர்களுக்கு) மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் |
| விசேட தினம் | : அமாவாசை விரதம் |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# சிலாபம் முன்னேஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி பூஜை



(ரஸீன் ரஸ்மின்)

பஞ்ச ஈஸ்வரங்களில் முதன்மை பெற்றதும் புத்தளம் மாவட்டத்தில் பிரசித்திபெற்றதும் சக்தி பீடங்களில் ஒன்றுமான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதசுவாமி தேவஸ்தானத்தில் மகா சிவராத்திரி நிகழ்வுகள் நேற்று முன்தினம் (18) மாலைமுதல் நேற்று (19) அதிகாலை வரை இடம்பெற்றன.

ஆலயத்தின் பிரதம குருவும் தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ ச.பத்மநாபக் குருக்கள் தலைமையில் இந்த மகா சிவராத்திரி நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வில் மாலை 3 மணிக்கு மஹாபிரதோஷ 108 சங்காபிஷேகம் சாயரக்ஷை பூஜையும், இரவு 7 மணிக்கு முதலாம் சாம பூஜையும் தொடர்ந்து 2ஆம் கால பூஜையும், இரவு 10.30 மணிக்கு இரண்டாம் சாம பூஜையும், விசேட பூஜையும் இடம்பெற்றன.

அத்துடன், நள்ளிரவு 1 மணிக்கு மூன்றாம் சாம பூஜையும், விஷேட பூஜையும், அதிகாலை 3.30 மணிக்கு நான்காம் சாம பூஜையைத் தொடர்ந்து மஹா சிவராத்திரி தீர்த்த வாரியுடன் நிறைவுபெற்றது.

# குருவிட்ட பகுதியில் கிணறொன்றிலிருந்து இரண்டு சிறுவர்களின் சடலங்கள் மீட்பு

இரத்தினபுரி கரபிஞ்சா தோட்டத்தில் ஏழு வயது மற்றும் ஒன்றரை வயதுடைய இரண்டு குழந்தைகளின் சடலங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக நேற்று (19) குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

குருவிட்ட சென்.ஜோக்கிம் வத்த பகுதியில் 4ஆம் இலக்க லயன் குடியிருப்பு வீடொன்றில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு வயதுடைய கஜேந்திரகுமார் சர்வநாத் மற்றும் ஒன்றரை வயதுடைய கஜேந்திரகுமார் நிஷாத் ஆகிய இரு பிள்ளைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குழந்தைகளின் மரணம் குறித்து சந்தேகத்தின் பேரில் 29 வயதுடைய குழந்தைகளின் தாயார் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18ஆம் திகதி மாலை இரு குழந்தைகளின் பெற்றோருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளதாகவும் தகராறு காரணமாக உயிரிழந்த இரு குழந்தைகளின் தாய் அதிகாலை வீட்டை விட்டு வெளியேறியுள் ளதாகவும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையும் தகராறு காரணமாக வீட்டை விட்டு வெளியேறி யதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

பின்னர் வீடு திரும்பியபோது இரண்டு பிள்ளை களும் வீட்டில் இல்லை என குழந்தைகளின் தாயான பெண் தெரிவித்துள்ளார்.குடியிருப்பு லயன் அருகே சோதனை நடத்தி யதில், இரண்டு குழந்தைகளும் கிணற்றில் விழுந்து உயிரிழந்த நிலையில், மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குழந்தைகளின் தாய் பனடோல் மாத்திரை குடித்து தற்கொலைக்கு முயற்சித்த நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.இரு குழந்தைகளின் மரணம் கொலையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கிப்பதுடன், குழந்தையின் தாய் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# தனமல்விலவில் கஞ்சா தோட்டம் முற்றுகை

(கனகராசா சரவணன் )

தனமல்வில பொலிஸ் பிரிவிலுள்ள அம்பிலிபிட்டிய பிரதேசத்தில் கஞ்சா தோட்டங்களை விசேட அதிரடிப்படையினர் நேற்று (19) முற்றுகையிட்டதுடன், கஞ்சா செடிகளை பிடுங்கி அழித்ததுடன் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி ஒன்றையும் மீட்டுள்ளனர்.

கதிர்காமம் விசேட அதிரடிப்படைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த சுற்றிவளைப்பு நேற்று மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து கஞ்சா பயிரிட்டுவந்தவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியதுடன், கஞ்சா செடிகள் பிடுங்கி தீயிட்டு அழிக்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாலைதீவு உற்சவகால கடைகளுக்கு அனுமதி

புனித பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த யாத்திரை உற்சவத்திற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வருடாந்த ஆலய உற்சத்தை முன்னிட்டு யாத்திரிகர்களுக்கான விழாக்கால வியாபார நிலையங்களுக்கான நில வாடகைக்கு வழங்குவதற்கான முற்பதிவுகளுடனான தொடர் இலக்கங்கள் வழங்குதல் மற்றும் விழா காலத்தில் வியாபார நிலையம் நடத்துபவர்கள் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் பற்றிய கலந்துரையாடல் பூநகரி பிரதேச சபையினால் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 01.03.2023 ஆம் திகதி புதன்கிழமை காலை 11மணிக்கு பூநகரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெறுமென பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

முன்னேற்பாட்டு கலந்துரையாடலில் கலந்துகொள்பவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொல்பிட்டிய சமனல நீர்மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் இடைநிறுத்தம்

பொல்பிட்டிய சமனல நீர்மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி இயந்திரங்கள் பழுதுபார்ப்பு பணி காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக நீர்மின் நிலையத்தின் உயர்மட்ட மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நீர்மின் நிலையம் 75 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்திசெய்கிறது. லக்ஷபான நீர்மின் நிலையத்திலிருந்து நீர்மின் உற்பத்திக்காக பெறப்படும் நீர் லக்ஷபான நீர்த்தேக்கத்திலிருந்து சமனல நீர் மின் நிலையத்துக்கு சுரங்கப்பாதை ஊடாகக் கொண்டுசெல்லப்படுகிறது.

லக்ஷபான நீர்மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதையடுத்து, களனி ஆற்றில் நீரை திறந்துவிடுவதற்கு லக்ஷபான நீர்மின் நிலையத்தின் கட்டுப்பாட்டு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



மகா சிவராத்திரியை முன்னிட்டு கொட்டாஞ்சேனை ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வர ஆலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. (படப்பிடிப்பு – லலித் பெரேரா)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பஹ்ரைனுக்கு கைத்துப்பாகியுடன் செல்லவிருந்த ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)



பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பஹ்ரைனுக்கு விமானம் மூலம் செல்வதற்கு இருந்த கம்பளையைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரை நேற்று (19) பிற்பகல் கைத்துப்பாக்கியுடன் கைதுசெய்துள்ளதாக விமான நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளையைச் சேர்ந்த குறித்த நபர் சம்பவ தினமான நேற்று (19) பஹ்ரைனுக்கு பகல் 2.15இற்கு செல்லவிருந்த விமானத்தில் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றபோது அங்கு விமான நிலைய முதல் சோதனைச்சாவடியில் அவரின் பையை விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஸ்கானிங் செய்தபோது பையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த கைத்துப்பாகி ஒன்றை கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, குறித்த நபரை கைதுசெய்ததுடன், கைத்துப்பாக்கியையும் மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலையப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, பெப்ரவரி 20ஆம் திகதி, திங்கட்கிழமை

# சட்டத்தரணி வட்டகலவின் நியாயமிக்க கருத்துகள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டால், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்தைப் போன்று அரசியல் அதிகாரங்களைக் கொண்டிருந்தோரும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளும் உயர் நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடுமென தேசிய மக்கள் சக்திக்கான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

சட்டத்தரணி சுனில் வட்டகல செய்தியாளர் மாநாட்டில் கூறுகையில், ''உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கைகளின் பின்னணியில் அமைச்சரவையும் அரசியல் உயர்பீடம் மற்றும் ஐந்து அரசாங்க அதிகாரிகளும் உள்ளனர்.

அரசியல் அதிகார சபையினால் எடுக்கப்படும் தேர்தல் ஒத்திவைப்புத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பானவர்கள் பொலிஸ்மா அதிபர், திறைசேரி செயலாளர், சட்டமா அதிபர், அரசாங்க அச்சக அதிகாரி மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் ஆகிய ஐந்து அரச அதிகாரிகளே இதற்குப் பொறுப்பானவர்கள்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பான சமீபத்திய தீர்ப்பின்போது, பொதுமக்கள் மீதான தங்கள் பொறுப்பை நிறைவேற்றத் தவறிய அரசியல் உயர்பீடம் மற்றும் அரசாங்க அதிகாரிகள் மீது உயர் நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை வழங்கியது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்ததற்குக் காரணமானவர்களுக்கும் பொருந்தும். தேர்தலை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் இன்னும் கடுமையான குற்றமாகும்" என்றும் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி சுனில் வட்டகலவின் கருத்துகள் நியாயமானதும் அர்த்தமிக்கவையாகவும் இருக்கின்றன என்று கூறினால் மிகையாகாது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசியல் கட்சிகள் பிரசாரங்களை ஆரம்பித்த பின்னரும் கூட தேர்தலை நடத்துவது தொடர்பில் அரச துறைக்குள் இல்லாத ஒருங்கிணைப்பு, திட்டமிடப்பட்ட இழுபறி என்பனவற்றால் நாட்டின் ஜனநாயகம் கடும் கேள்விக்குறியாகியிருக்கிறது.

சுயாதீன ஆணைக்குழு என்பது அதிகாரம் கொண்டது. அந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு அரசியல் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது. அரசியல் அழுத்தங்களை ஏற்று செயற்படவேண்டும் என்ற கடப்பாடும் அந்த ஆணைக்குழுவுக்கு இல்லை. ஆனால், தேர்தல் ஆணைக்குழு தற்போதைய ஆட்சியாளர்களால் நடத்தப்படும் விதம் பெரும் விசனத்தையும், அதிருப்தியையும் தருகிறது என்பதுதான் இன்றைய நிலை.

தேர்தலுக்கு நிதி கொடுப்பதாக சொன்ன திறைசேரி அந்தர்பல்டி அடிக்கிறது. பொலிஸ் பாதுகாப்பைத் தர இணங்கிய பொலிஸ் திணைக்களமும், அச்சக வேலைகளை உரிய நேரதத்தில் முடித்து தருவதாக கூறிய அரச அச்சகமும் சூனியம் செய்துவிட்ட கோழிகளை போல் தடுமாறிக்கொண்டிருக்கின்றன. இத்தனைக்கும் தேர்தலுக்குரிய நிதி கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருந்த காலங்களில் எல்லாம் தேர்தலை உரிய நேரத்திற்கு நடத்தியவர் அல்லர். தேர்தலை இழுத்தடிப்பது ஒரு கலை என்றால் ரணில் அதில் பிக்காஸோ என்று கூறுமளவுக்கு ரணிலின் ஜனநாயகப் புகழ் மேலோங்கியிருக்கிறது. இத்தனைக்கும் தனக்கு பதவியை வழங்கிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அடியோடு துடைத்தெறியப்படுவதை விரும்பாத ரணில், செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் தேடி வஞ்சத்தில் வீழ்ந்தவராக இருக்கிறார்.

சுனில் வட்டகல கூறுவதுபோல் நாட்டின் நீதித்துறை, ஜனநாயகம் என்ற பெயரில் நடக்கும் திருகுதாளங்களுக்கு ஒரு நாள் சாட்டையடி கொடுக்கவே போகிறது. அப்போது, அரசியல் அதிகாரங்களைக் கொண்டிருந்தோரும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளும் உயர் நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதே உண்மை.




# செயற்கை நுண்ணறிவு எனும் சவால்

**கி. கோபிநாத்**

செயற்கை நுண்ணறிவு (ஆர்ட்டிஃபிஷல் இன்டலிஜென்ஸ் - ஏ.ஐ.) தொழில்நுட்பம் இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்கு சவாலாகும் அதேவேளை, தொழில்நுட்ப வளர்ச்சியின் அடுத்த மைல்கல்லாக வளர்ந்துகொண்டிருக்கிறது. மனிதர்களைப் போல் இயந்திரங்களை சிந்திக்க வைப்பதுதான் செயற்கை நுண்ணறிவு.

செயற்கை நுண்ணறிவு மூன்றுவிதமாக பிரிக்கப்படுகிறது. கொடுக்கப்பட்ட ஒரு வேலையை மட்டும் சிறப்பாகச் செய்யும் ஆர்ட்டிஃபிஷல் நேரோ இன்டலிஜன்ஸ். ஒரு மனிதனின் மூளையைப் போல, கொடுக்கப்பட்ட பயிற்சிக்கு மேல் புதிய முடிவுகளைத் தன்னிச்சையாக மேற்கொள்ளும் ஆர்ட்டிஃபிஷல் ஜெனரல் இன்டலிஜென்ஸ். பல கோடி மனிதர்கள் மற்றும் விலங்குகளினுடைய மூளையின் திறமையையும் ஒன்று சேர்த்த திறமை கொண்ட ஆர்ட்டிஃபிஷல் சுப்பர் இன்டலிஜன்ஸ்.

இப்போது பெரும்பாலும் நடைமுறையில் உள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது, ஆர்ட்டிஃபிஷல் நேரோ இன்டலிஜன்ஸ் - ஆர்ட்டிஃபிஷல் ஜெனரல் இன்டலிஜன்ஸ், இந்த இரண்டுக்கும் இடைப்பட்டது. இந்தத் தொழில்நுட்பத்தால் தரவுகளை அலசி ஆராய்ந்து கண்ணிமைக்கும் நேரத்தில் முடிவுகளை கொடுத்துவிட முடியும். ஆனால், புதிதாக எதையும் செய்துவிட முடியாது. செயற்கை நுண்ணறிவு சிறப்பாக செயற்பட, அதற்கு நிறைய தரவுகள் கொடுக்கப்பட வேண்டும். இந்தத் தரவுகளைத் திரட்டுவதே ஒரு பெரிய பணியாக இருக்கும்.

மருத்துவம், வணிகம், கல்வி, நிதி, சட்டம், வங்கி, போக்குவரத்து, பாதுகாப்பு, உற்பத்திப்பணி என்று பல்வேறு துறைகளில், செயற்கை நுண்ணறிவு பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

நாம் விரும்பும் பாடலைச் சொன்னால், ஏ.ஐ. தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான கருவி உடனடியாக அப்பாடலை ஒலிக்கிறது. நாம் பேச வேண்டிய நபரின் பெயரைச் சொன்னால், நமது கைபேசி அவரை அழைக்கிறது. செயற்கை நுண்ணறிவானது நாம் விரும்பும் ஓவியத்தை வரைந்து கொடுக்கும். கவிதை எழுதிக் கொடுக்கும். புத்தகங்கள் எழுதிக் கொடுக்கும். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் அடிப்படையில்தான் வங்கியின் தானியங்கி பண வைப்பு/ மீளப்பெறல் இயந்திரம் (ATM) இயங்குகிறது.

ரோபோக்களில் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பல புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க முடியும் என்று கணித்துள்ளனர். ஓட்டோமேஷன் எனப்படும் தானியக்கத் தொழில்நுட்பத்துடன் செயற்கை நுண்ணறிவு இணைக்கப்பட்டிருக்கிறது. இதனால், தானியக்கக் கருவிகளின் வழியாகச் செய்யப்படும் பணிகளின் அளவு விரிவடைந்து கொண்டே வருகிறது.

ஏ.ஐ. அடிப்படையிலான இயந்திரங்கள், கணினிகள் போன்றவற்றை அமைப்பதற்கு மிகப்பெரிய செலவை ஏற்படுத்துகிறது. பழுதுக்கும் பராமரிப்புக்கும் பெருந்தொகை செலவாகிறது. மேலும், ஏ.ஐ. மென்பொருளை தொடர்ந்து மேம்படுத்துவது அவசியமாகும். உதாரணமாக, நீங்கள் மறந்தாலும், உங்களது ஏ.ஐ. கருவியானது சரியான நேரத்துக்கு நீங்கள் மறந்த வேலையைச் செய்து முடிக்கும். அதுவே, மென்பொருள் செயலிழந்தாலோ மேம்படுத்த மறந்தாலோ அந்தக் குறியீடுகளை மீட்டெடுப்பது சவாலான ஒன்றாக அமையும்.

மனிதர்களுக்கு மட்டுமேயான உணர்ச்சி, தார்மிகம், நிர்வாகத்திறன் போன்றவை ஏ.ஐ.யுடன் கூடிய இயந்திரங்களுக்கு இருக்காது. மனிதர்களுடன் ஒப்பிடும்போது இயந்திரங்கள் மிகவும் திறமையாக செயற்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால், ஓர் இயந்திரம் எவ்வளவு புத்திசாலியாக மாறினாலும், அது ஒரு மனிதனாக பரிணமிக்க முடியாது.

தற்போது, கணினித்துறை சார்ந்து வேலைவாய்ப்புகளை உருவாக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சியும் மனித குலத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துகிறது. மனித மூளையின் செயல்திறனை அடிப்படையாக வைத்து ஏ.ஐ. தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டிருந்தாலும் கொடுக்கும் பணிகளை அது மின்னல் வேகத்தில் செய்து முடித்தாலும் இந்தத் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவோரின் மூளை, சிந்திக்கும் திறனை படிப்படியாக இழக்கும். பயன்படுத்துவோரை மேலும் சோம்பேறிகளாக்கும். உடல் ஆரோக்கியம் கெடும்.


மெக்கின்சி குளோபல் இன்ஸ்டிடியூட் நடத்திய ஆய்வின்படி, 2030ஆம் ஆண்டிற்குள், உலகின் தற்போதைய மனித உழைப்பில் 30 சதவீதத்தை செயற்கை நுண்ணறிவும் ரோபோக்களும் எடுத்துக்கொண்டுவிடும். 2030ஆம் ஆண்டிற்குள் 400 முதல் 800 மில்லியன் வேலைகளை தானியங்கித் தொழில்நுட்பம் தனதாக்கிக் கொள்ளும். 375 மில்லியன் மக்கள் தமது வேலையை வேறு துறைகளுக்கு மாற்ற வேண்டி வரும் என்று தெரியவந்துள்ளது.

பெரும்பாலான நிறுவனங்கள் குறைந்தபட்சத் தகுதி வாய்ந்த நபர்களுக்கு பதிலாக, அதே வேலையைச் செய்ய செயற்கை நுண்ணறிவு அல்லது தானியங்கித் தொழில்நுட்பத்தை நாடத் தொடங்கிவிட்டன. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது மீண்டும் மீண்டும் செய்யக்கூடிய வகையிலான பெரும்பாலான பணிகளைக் கையகப்படுத்தத் தொடங்கிவிட்டது. எனவே, வருங்காலங்களில் டேட்டா சயன்ஸ் படிப்புக்கு அதிக தேவை இருக்கும். ஒரு காலத்தில் கம்ப்யூட்டர் சயன்ஸ் படிப்புக்கு இருந்த கேள்வி, இனி மாணவர்கள் மத்தியில் டேட்டா சயன்ஸ் படிப்புக்கு இருக்கும்.

மாற்றங்களுக்குள் நம்மை பொருத்திக்கொள்ளத் தயாராக வேண்டும். புதிய தொழில்நுட்பத்தைக் கற்று, புதிய வேலைவாய்ப்புகளைப் பெற வேண்டும். 1980களில் கணினிப் புரட்சி ஏற்பட்டபோதும், வேலைவாய்ப்பு இழப்பு பயம் ஏற்பட்டது. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் அதன் வழிக்கு மாறினார்கள்.

அதேபோல் ஏ.ஐ. தொழில்நுட்பத்தையும் மக்கள் தகவமைத்துக் கொள்வார்கள் - தகவமைத்துக் கொள்ள வேண்டும். வருங்காலத்தில் ஏ.ஐ. தொழில்நுட்பத்தை பயன்படுத்துவோர் சந்தையில் நிலைத்து நிற்பார்கள். அதைப் பயன்படுத்தத் தெரியாதவர்கள் கால வெள்ளத்தில் கரைந்துவிடுவார்கள்.

*நன்றி: தினமணி*



# ஒலி படைக்கும் ஹோலோகிராம்!

திரையில்லாமல் முப்பரிமாண உருவங்களைக் காட்டுவதுதான் ஹோலோகிராம். இது ஒளி இயற்பியலால் செய்யப்படும் வித்தை. ஆனால், இதே போன்ற ஹோலோகிராம் உருவங்களை ஒலியாலும் உருவாக்க முடியும் என்று காட்டியுள்ளனர் ஜேர்மனியைச் சேர்ந்த ஹெய்டெல்பெர்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

அது எப்படி? அல்ட்ரா சவுண்ட் எனப்படும் மீயொலியை எழுப்பும் தகடுகளை நாலா புறமும் வைத்து, நடுவே ஒரு திரவத்தில் மிதக்கும் கண்ணாடிக் குளிகைகள், ஹைட்ரோஜெல் போன்றவற்றை விஞ்ஞானிகள் வைத்தனர். இப்போது, தேவையான உருவத்தை வார்த்தெடுக்க, தகடுகளிலிருந்து ஒலியை கட்டுப்படுத்தி அனுப்பினர்.

இந்த ஒலிப்புலம் கண்ணாடிக் குளிகை, ஹைட்ரோஜெல் போன்றவற்றை நகர்த்தி வேண்டிய உருவத்தை கொண்டு வரும் வகையில், ஒரு வார்ப்பு போன்று செயற்பட்டது.

இந்த நுட்பத்தின் மூலம் ஒரு புறா மற்றும் 8 வடிவம் போன்ற உருவங்களை உருவாக்கினர். ஒலி மூலம் ஹோலோகிராம் படைக்க முடிந்ததே ஆச்சரியம் என்றால், அதே நுட்பத்தின் மூலம் உயிருள்ள செல்களை வைத்து, உடல் உறுப்புகளைக்கூட முப்பரிமாணத்தில் அச்சிட முடியும் என ஹெய்டெல்பெர்க் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


## நக்கல் நமசிவாயம்

**முன்னர் கரண்ட் இல்லாமல் இருட்டில் இருக்கப் பயமாக இருந்தது.. இப்போதெல்லாம் கரண்ட் இருந்தாலும் வெளிச்சத்தில் இருக்கப் பயமாக இருக்கிறது... இருட்டில் இருப்பதே நிம்மதி போலத்தான் தெரியுது..!**



# இன்றைய நாளில்..

- 1627 – யாழ்ப்பாணத்தைத் தாக்கிய சூறாவளியில் சிக்கி பலர் இறந்தனர்.
- 1818 – இலங்கையின் கண்டிப் பிரதேசத்தில் இராணுவ சட்டம் பிறப்பிக்கப்பட்டது.
- 1935 – அண்டார்ட்டிக்காவுக்குச் சென்ற முதல் பெண் என்ற சாதனையை டென்மார்க்கைச் சேர்ந்த கரோலைன் மிக்கெல்சன் ஏற்படுத்தினார்.
- 1946 – இலங்கைக்கு முதன்முதலாக இரட்டைத்தட்டு பஸ் கொண்டு வரப்பட்டது.
- 1965 – அப்பலோ விண்கலங்கள் சந்திரனில் இறங்குவதற்கான இடங்களை வெற்றிகரமாகப் படமெடுத்த ரேஞ்சர்-8 விண்கலம், சந்திரனுடன் மோதியது.
- 1986 – சோவியத் ஒன்றியம் மீர் விண்கலத்தை ஏவியது. 15 ஆண்டுகள் புவியின் சுற்றுவட்டத்தில் இவ்விண்கலம் நிலைகொண்டிருந்தது.
- 1987 – இந்தியாவின் அருணாசலப் பிரதேசம், அசாம் மாநிலத்திலிருந்து பிரிந்து தனி மாநிலமாகியது.
- 2009 – இலங்கையில் தேசிய வான்படைத் தலைமை அலுவலகத்தைத் தாக்கும் பொருட்டு புறப்பட்ட விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையின் இரண்டு வானூர்திகள் இராணுவத்தினரால் சுட்டு வீழ்த்தப்பட்டன.



# தேன் பருகும் வௌவால்

அதிகம் ஆராய்ச்சி செய்யப்பட்ட உயிரினங்களில் ஒன்று வௌவால். இருந்தாலும், ஆண்டுதோறும் வௌவாலைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் ஏதாவது புதிதாகக் கண்டுபிடித்தபடியே இருக்கின்றனர். அண்மையில் அமெரிக்காவிலுள்ள டார்ட்மவுத் கல்லூரியின் ஆராய்ச்சியாளர்கள், பல்லா என்ற குட்டி வௌவாலை, அகச் சிவப்புக் கதிர் கெமரா மூலம் அதிவேகமாகப் படம் பிடித்தனர்.

அப்போது அந்தக் குட்டி வௌவால், ஒரு பூவினுள் தன் நாக்கை நீட்டி தேனை நக்கியது. அப்போது அதன் மூக்குப் பகுதியில் உரோமம் போன்ற அமைப்பு இருந்தது. அதை வைத்துத்தான் பறக்கும் வேகம், தேனை எடுக்கும் இலாவகம் ஆகியவற்றை அந்த வௌவாலின் மூளை கணிக்கிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

அது மட்டுமல்ல, தேன் உண்ணும் வௌவால் போன்ற உயிரினங்களும் தேன் தரும் தாவரங்களும் ஒன்றுக்கொன்று ஆதரவாகப் பரிணாம வளர்ச்சியடைந்து வருவதையும் டார்ட்மவுத் கல்லூரியின் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

# ரூ.490 மில்லியன் செலவில் கண்டியில் நிறுவப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது புலம்பெயர் பறவைகள் பூங்கா




கண்டி, ஹந்தானையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது புலம்பெயர் பறவைகள் பூங்கா மற்றும் சுற்றாடல் சுற்றுலா வலயம் இன்று (20) திறந்து வைக்கப் படவுள்ளது.

'ஹந்தானை சர்வதேச பறவைகள் பூங்கா மற்றும் பொழுதுபோக்கு மையம்' என பெயரிடப்பட்டுள்ள இந்த பூங்கா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இன்று (20) பிற்பகல் 03.00 மணிக்கு திறந்துவைக்கப் படவுள்ளது. இந்த பூங்கா எதிர்வரும் 23ஆம் திகதி முதல் பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்படும்.

ஹந்தானை தேயிலை அருங்காட்சியக வளாகத்திற்கு அருகில் அமைந்துள்ள இந்த 27 ஏக்கர் புலம்பெயர் பறவை பூங்கா மற்றும் சுற்றாடல் சுற்றுலா வலயம் நூற்றுக்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த பறவைகளின் இருப்பிடமாக உள்ளது.

வெளிநாடுகளுக்குச் சொந்தமான பறவைகள், புலம்பெயர் பறவைகள் போன்றவற்றை உள்ளடக்கிய பூங்காவில், காயமடைந்த பறவைகளுக்கு சிகிச்சை அளித்து விடுவிக்கும் பிரிவும் உள்ளது.

490 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள இந்த பறவை பூங்காவில் வெளிநாட்டு பறவைகள் பெரிய கூண்டுகளில் அடைத்து வைத்து பராமரிக்கும் பணியில் ஏறக்குறைய நூறு பணியாளர்கள் உள்ளனர்.

இந்த பூங்கா 40 வருட காலப்பகுதியில் இலங்கைக்கு சொந்தமான பறவைகள் பற்றிய ஆய்வின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமானது புலம்பெயர்ந்த பறவைகளை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

விலங்கியல் மாணவர்களுக்கான கல்வி பயிற்சி நிலையம், பறவை காப்பகம், பறவைகள் தங்குமிடம் மற்றும் ஒரு தனிமைப்படுத்தல் பிரிவு என்பனவும் உள்ளன.

இந்த பூங்காவில் வெளிநாட்டு பறவைகளை இனப் பெருக்கம் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான அலகும், பாடசாலை மாணவர்களுக்கான கல்வி மற்றும் பொழுது போக்கு மையம் மற்றும் இயற்கை பறவைகள் ஆய்வு மையம் என்பனவும் உள்ளன.



**மகா சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவப் பேரவை இலங்கைக் கிளை ஏற்பாட்டில் இலங்கை பூராவும் கொடி தினம் அனுஷ்டிக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்துசமய ஆலோசகர் இராமச்சந்திர பாபுசர்மா குருக்கள் அவரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்று, அவருக்கு பொன்னாடை போர்த்தி நந்திக்கொடியை அணிவித்தார். மகேஸ்வரசர்மா சுரேஷ்வர குருக்கள் மாலை அணிவித்து கௌரவித்தார்**





**மகா சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவப் பேரவை இலங்கைக் கிளை ஏற்பாட்டில் உலக சைவ கொடித்தினம் தலைவர் எஸ்.தனபாலா தலைமையில் சம்மாங்கோடு மாணிக்கப்பிள்ளையார் ஆலய அறங் காவலர் அருணாச்சலம்பிள்ளை மாணிக்கவாசகர் முன்னிலையில் அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கலந்துகொண்டார்.**

## புகையிரத பயணிகளிடம் கைபேசிகளை கொள்ளையிட்டவர் ராகமையில் கைது



ராகம புகையிரத நிலையத்தில் பயணிகளின் கைத் தொலைபேசிகளை திருடிய சந்தேகநபர் ஒருவரை ராகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் ராகம தம்புவ பிரதேசத்தை சேர்ந்த 36 வயதுடையவர் என ராகம பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும், கைதுசெய்யப்படும்போது சந்தேகநபரிடமிருந்து 7 இலட்சம் பெறுமதியான 10 கைத்தொலைபேசிகள் காணப்பட்டதாகவும் ராகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் புத்திக ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாளிகாவத்தை பகுதியில் உள்ள ராகம புகையிரத நிலையத்திற்கு வரும் பயணிகளிடம் திருடப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை சந்தேகநபர் விற்பனை செய்துள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாகவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட 10 கையடக்கத் தொலைபேசிகள் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள, ராகம பொலிஸ் நிலையத்துக்கு வந்து தகவல்களைப் பெறலாம்.

## நீர்கொழும்பு கடற்படையினரால் 535 கிலோ பீடி இலைகள் மீட்பு



நீர்கொழும்பு பொருதொட்டை கடற்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் சுமார் 535 கிலோகிராம் எடையுள்ள கடத்திச் செல்லப்பட்ட பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

பொருத்தோட்ட கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான 18 பொதிகள் நேற்று முன்தினம் (18) நீரில் மிதந்துவந்த நிலையில், கடற்படையினர் அந்தப் பொதிகளை மீட்டெடுத்தபோது, பொதிகளில் சுமார் 535 கிலோகிராம் (ஈரமான எடை) எடையுள்ள பீடி இலைகள் நிரப்பப்பட்டிருந்ததைக் கண்டறிந்தனர்.

கடற்படையினரின் சுற்றிவளைப்பு காரணமாக கடத்தல்காரர்கள் இந்த பீடி இலைகளை கடற்பரப்பில் விட்டுச் சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதற்கிடையில், கடத்தல் பொருட்கள், சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்கவில் உள்ள சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டன.

## தாயுடன் வீதியை கடக்க முற்பட்ட சிறுமி கார் மோதியதில் உயிரிழப்பு

### தாய் காயங்களுடன் வைத்தியசாலையில்

கெபித்திகொல்லேவ – புனேவ வீதியில் மஹகும்புகொல்லேவ சந்திக்கு அருகில் தனது தாயுடன் வீதியைக் கடக்கச் சென்ற சிறுமியொருவர் காரில் மோதி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த 13 வயது சிறுமியின் தாய் தற்போது வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். தாய்-மகள் இருவரும் புனேவ, மஹகும்பு கொல்லேவ பிரதேசத்தில் வசிப்பவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய கார் மதவாச்சியிலிருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தைத் தொடர்ந்து திடீரென சுகயீன மடைந்த காரின் சாரதி தற்போது பொலிஸ் காவலில் உள்ள மதவாச்சி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பில் கெபித்திகொல்லாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மிரிஹான பொலிஸ் நிலையத்தில் உடலில் தீ வைத்துக்கொண்ட நபர்

மிரிஹான தலைமை பொலிஸ் நிலையத்தினுள் தனது உடலுக்கு தீ வைத்துகொண்டு மனைவியை கட்டியணைக்க முயன்ற நபரொருவர் தொடர்ந்தும் களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

குறித்த நபரினால் தனது மனைவிக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணைகளுக்காக வருகை தந்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மிரிஹான பொலிஸ் நிலையத்தின் முறைப்பாடுகள் பிரிவில், சந்தேகநபர் லைட்டரை பற்றவைத்து தனது உடலுக்கு தீ வைத்துக்கொண்டு, அருகில் இருந்த மனைவியை கட்டியணைக்க முயன்றுள்ளார்.

எனினும், மனைவி வெளியே ஓடி வந்து உயிர் தப்பியதாக பொலிஸார் தெரிவித்தனர்.பின்னர், பொலிஸார், தீ வைத்துக்கொண்ட நபரை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென் றனர்.

அதன்போது அவரது உடையில் பெட்ரோல் வாசனை வீசியதாகவும், 34 வயதான குறித்த சந்தேகநபர் போதைப்பொருள் வைத்திருந்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளை மேற்கொண்டு வந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

## செலான் வங்கி பீ.எல்.சி.

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி.) - அம்பலங்கொட கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

அம்பலங்கொடவை வதிவிடமாகக்கொண்ட வர்ணகுல சோமசிறி சொய்சா மற்றும் தீனமுல்ல கங்காணங்கே தரங்கனி பெரேரா ஆகிய இருவரும் "கடப்பாட்டாளர்களாகவும் / ஈடுவைத்தவர்களாகவும்" என்ற வகையில் தவணைப் பணம் செலுத்தத் தவறியுள்ளார். அதனால் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. தசித பிரியந்தி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி 1572ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி 1426ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி 1703ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஏ.பீ.பலிஹாபிடி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி 553ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மூலம் செலான் வங்கியில் அடகுவைக்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் வளாகமானது.

**2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் செலான் வங்கி பீ.எல்.சியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி, இல. 90, காலி வீதி, கொழும்பு 03இல் உள்ள வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் 19 நெறிமுறைகளை பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடத்தப்படும்.

**1ஆவது ஏல விற்பனை - நேரம் மு.ப 11.00 மணிக்கு**

**அட்டவணை**

தென் மாகாணத்தில், காலி மாவட்டம், வெல்லபட பத்துவே, மாதம்பே, ஹிக்கடுவ பிரதேச செயலகப் பிரிவிற்குள் மற்றும் 79 ஏ உஸ்முதுலாவ கிராம சேவகர் பிரிவிற்குள், மஹருப்பவில் அமைந்துள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் திரு.எஸ்.பீ. வீரவர்தன என்பவரினால் வரையப்பட்ட 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதியிடப்பட்ட 998ஆம் இலக்க வரைபடத்தின்படி குறிப்பிடப்பட்டுள்ள துவவத்த லொட்ஸ் 3, 4, 5 மற்றும் 6 என்று ஒன்றிணைக்கப்பட்ட அருகில் உள்ள நிலங்களில், மரங்கள், கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் பிற பொருட்களைக்கொண்ட நிலம் மற்றும் அனைத்தும் அடங்கலான சொத்தானது லொட் ஏ எனக் குறிக்கப்பட்ட நிலத்தின் அளவு பதினான்கு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.14.50) விசாலமான காணி.

கீழே விவரிக்கப்பட்டுள்ள நிலத்தின் மீது மேலாகவும் மற்றும் நேராகவும் பயணிக்கக்கூடிய வழியின் உரிமையுடன்.தென் மாகாணத்தில், காலி மாவட்டம், வெல்லபட பத்துவே, மாதம்பே, ஹிக்கடுவ பிரதேச செயலக பிரிவிற்குள் மற்றும் 79 ஏ உஸ்முதுலாவ கிராம சேவகர் பிரிவிற்குள், மஹருப்பவில் அமைந்துள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் திரு.எஸ்.பீ.வீரவர்தன, என்பவரினால் வரையப்பட்ட 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதியிடப்பட்ட 998 ஆம் இலக்க வரைபடத்தின்படி குறிப்பிடப்பட்டுள்ள துவவத்த என்று ஒன்றிணைக்கப்பட்ட அருகில் உள்ள நிலங்களில், மரங்கள், கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் பிற பொருட்களைக் கொண்ட நிலம் மற்றும் அனைத்தும் அடங்கலான சொத்தானது லொட் 8 ஏ எனக் குறிக்கப்பட்ட நிலத்தின் அளவு இரண்டு தசம் மூன்று பூச்சியம் பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.2.30) விசாலமான காணி.

பிரசித்த நொத்தாரிசு ஏ.பீ.பலிஹாபிடி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 05 ஆம் திகதி கூடுதல் அடமானப் பத்திர இலக்கம் 553இன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்து

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** அம்பலாங்கொடை பிரதான பஸ் நிறுத்தும் இடத்தில் இருந்து காலியை நோக்கி 2.7Km உஸ்முதுலாவ சந்தி வரை சென்று இடது பக்கம் உள்ள அளுத்வல வீதியில் 900 மீற்றர் சென்று இடதுபுறம் திரும்பி சிறிது தூரம் சென்ற பின் அந்த வீதியின் இறுதிப் பகுதியில் இந்த விடயத்திற்கான சொத்து அமைந்துள்ளது.

**2ஆவது ஏல விற்பனை - நேரம் மு.ப. 11.15 மணிக்கு**

**அட்டவணை**

தென் மாகாணத்தில், காலி மாவட்டம், ஹிக்கடுவ பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் ரஜ்கம பிரதேச சபை எல்லைக்குள் 78 பி குளிகொட கிழக்கு கிராம சேவகர் பிரிவிற்குள், ரொன்னதுவயில் அமைந்துள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ.கமலசேன என்பவரினால் வரையப்பட்ட 2005ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதியிடப்பட்ட 195ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெல்கஹாவத்த லொட் ஜே க்கு அருகில் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட லொட்ஸ் 2 மற்றும் 3 என்று அழைக்கப்படும் காணி லொட் 2 ஏ என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவானது இருபத்து ஏழு தசம் எட்டு பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.27.8) அல்லது 0.0702 ஹெக்டேயர் விசாலமான காணி, மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக காணியானது பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. தஷிதா பிரியந்தி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் திகதி முதன்மை அடமானப் பத்திர இலக்கம் 1572 இன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்து.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** அம்பலாங்கொடை பிரதான பஸ் நிறுத்தும் இடத்தில் இருந்து காலியை நோக்கி 2.7Km உஸ்முதுலாவ சந்தி வரை சென்று இடது பக்கம் உள்ள குளிகொட வீதியில் 1.3Km சென்ற பிறகு (மருத்துவமனையைக் கடந்தவுடன்) இடது பக்கத்தில் இந்த விடயத்திற்கான சொத்து அமைந்துள்ளது.

**3ஆவது ஏல விற்பனை - நேரம் மு.ப. 11.30 மணிக்கு**

**அட்டவணை**

தென் மாகாணத்தில், காலி மாவட்டம், வெல்லபட பத்துவே, அம்பலங்கொட பிரதேச செயலாளர்அலுவலகம் மற்றும் பிரதேச சபை பிரிவிற்குள் 73 பி - உடகருவ கிராம சேவகர் பிரிவிற்குள், வீரகொடவில் அமைந்துள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.டீ.ஜீ.வீரசிங்க, என்பவரினால் வரையப்பட்ட 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07ஆம் திகதி 3545ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நவாமியாவே குருந்துவத்தை வடக்கு 1/3 பகுதியின் லொட் 1 - 7 என்றுஅழைக்கப்படும் நிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள் லொட் 123 என அடையானமிடப்பட்ட காணியின் அளவு பத்து தசம் ஏழு ஒன்று பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.10.71) அல்லது 0.0271 ஹெக்டேயர் விசாலமான காணி, மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.

தென் மாகாணத்தில், காலி மாவட்டம், வெல்லபட பத்துவே, அம்பலங்கொட பிரதேச செயலாளர்அலுவலகம் மற்றும் பிரதேச சபை பிரிவிற்குள் 73 பி - உடகருவ கிராம சேவகர் பிரிவிற்குள், வீரகொடவில் அமைந்துள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.டீ.ஜீ.வீரசிங்க, என்பவரினால் வரையப்பட்ட 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07ஆம் திகதி 3545ஆம் இலக்க வரைபடத்திலட குறிப்பிடப்பட்டுள்ள நவாமியாவே குருந்துவத்தை வடக்கு 1/3 பகுதியின் லொட் 1 - 7 என்று அழைக்கப்படும் நிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள் லொட் 124 என அடையானமிடப்பட்ட காணியின் அளவு பத்து தசம் ஏழு ஒன்று பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.10.71) அல்லது 0.0271 ஹெக்டேயர் விசாலமான காணி, மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.

தென் மாகாணத்தில், காலி மாவட்டம், வெல்லபட பத்துவே, அம்பலங்கொட பிரதேச செயலாளர்அலுவலகம் மற்றும் பிரதேச சபை பிரிவிற்குள் 73 பி - உடகருவ கிராம சேவகர் பிரிவிற்குள், வீரகொடவில் அமைந்துள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.டீ.ஜீ.வீரசிங்க, என்பவரினால் வரையப்பட்ட 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07ஆம் திகதி 3545ஆம் இலக்க வரைபடத்திலட குறிப்பிடப்பட்டுள்ள நவாமியாவே குருந்துவத்தை வடக்கு 1/3 பகுதியின் லொட் 1 - 7 என்று அழைக்கப்படும் நிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள் லொட் 125 என அடையானமிடப்பட்ட காணியின் அளவு பத்து தசம் ஏழு ஒன்று பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.10.71) அல்லது 0.0271 ஹெக்டேயர் விசாலமான காணி, மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.

தென் மாகாணத்தில், காலி மாவட்டம், வெல்லபட பத்துவே, அம்பலங்கொட பிரதேச செயலாளர்அலுவலகம் மற்றும் பிரதேச சபை பிரிவிற்குள் 73 பி - உடகருவ கிராம சேவகர் பிரிவிற்குள், வீரகொடவில் அமைந்துள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.டீ.ஜீ.வீரசிங்க, என்பவரினால் வரையப்பட்ட 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07ஆம் திகதி 3545ஆம் இலக்க வரைபடத்திலட குறிப்பிடப்பட்டுள்ள நவாமியாவே குருந்துவத்தை வடக்கு 1/3 பகுதியின் லொட் 1 - 7 என்று அழைக்கப்படும் நிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள் லொட் 126 என அடையானமிடப்பட்ட காணியின் அளவு பத்து தசம் ஏழு ஒன்று பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.10.71) அல்லது 0.0271 ஹெக்டேயர் விசாலமான காணி, மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.

உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.டீ.ஜீ. வீரசிங்க, என்பவரினால் வரையப்பட்ட 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07ஆம் திகதி 3545ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட்ஸ் 149, 151,152 மற்றும் 158 என்று அடையாளமிடப்பட்ட காணி மேலாகவும் மற்றும் நேராகவும் பயணிக்கக்கூடிய வழியின் உரிமையுடன்.

காணியானது பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. தஷிதா பிரியந்தி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி முதன்மை அடமானப் பத்திர இலக்கம் 1426 இன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்து.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி-** அம்பலாங்கொடை பிரதான பஸ் நிறுத்தும் இடத்தில் இருந்து காலியை நோக்கி 2.7Km உஸ்முதுலாவ சந்தி வரை சென்று இடது பக்கம் உள்ள குளிகொட வீதியில் ரொன்னதுவ சந்தி வரை சென்ற பிறகு இந்த விடயத்திற்கான காணி 20 அடி அகலமான வீதிக்கு எதிராக அமைந்துள்ளது.

**4ஆவது ஏல விற்பனை - நேரம் மு.ப. 11.45 மணிக்கு**

**அட்டவணை**

தென் மாகாணத்தில், காலி மாவட்டம், ஹிக்கடுவ பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் ரத்கமபிரதேச சபை பிரிவிற்குள் 79 ஏ1 - உஸ்முதுலாவ கிராம சேவகர் பிரிவிற்குள், மாதம்பே, மஹருப்பா அமைந்துள்ளது உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.பீ. வீரவர்தன, என்பவரினால் வரையப்பட்ட2017 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி 6923 ஆம் இலக்க வரைபடத்திள் குறிப்பிடப்பட்டுள்ளது.வேவத்த பிரிக்கப்பட்ட லொட் 1 இல் லொட் 1 ஏ என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு பதினாறு தசம் எட்டு பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.16.8) விசாலமான காணி, மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.

தென் மாகாணத்தில், காலி மாவட்டம், ஹிக்கடுவ பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் ரத்கம பிரதேச சபை பிரிவிற்குள் 79 ஏ1 - உஸ்முதுலாவ கிராம சேவகர் பிரிவிற்குள், மாதம்பே, மஹருப்பா அமைந்துள்ளது உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.பீ. வீரவர்தன, என்பவரினால் வரையப்பட்ட2017 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி 6923 ஆம் இலக்க வரைபடத்திள் குறிப்பிடப்பட்டுள்ளது. வேவத்த பிரிக்கப்பட்ட லொட் 1 இல் லொட் 1 பி என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு ஒன்பது பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.9) விசாலமான காணி, மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.

தென் மாகாணத்தில், காலி மாவட்டம், ஹிக்கடுவ பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் ரத்கம பிரதேச சபை பிரிவிற்குள் 79 ஏ1 - உஸ்முதுலாவ கிராம சேவகர் பிரிவிற்குள், மாதம்பே, மஹருப்பா அமைந்துள்ளது உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.பீ. வீரவர்தன, என்பவரினால் வரையப்பட்ட2017 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி 6923 ஆம் இலக்க வரைபடத்திள் குறிப்பிடப்பட்டுள்ளது. வேவத்த பிரிக்கப்பட்ட லொட் 1 இல் லொட் 1 சி என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு மூன்று தசம் இரண்டு பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.3.2) விசாலமான காணி, மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.

காணியானது பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. தஷிதா பிரியந்தி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 04ஆம் திகதி இலக்கம் 1703 இன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்து.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** அம்பலாங்கொடை பிரதான பஸ் நிறுத்தும் இடத்தில் இருந்து காலியை நோக்கி 2Km உஸ்முதுலாவ சந்தி வரை சென்று இடது பக்கம் உள்ள அலுத்வன வீதியில் 950 மீற்றர்தூரம் சென்ற பிறகு இடது பக்கமாக இந்த விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:** 2022.05.13ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2022.05.24ஆம் திகதி டெய்லி மிரர், அத மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:-** உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% (2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% (4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,000/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள் ரூபா 2.500/- (6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும்.மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டு ள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும். பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி., இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்: 011-2456471, 011-2456479

எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடத்துவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

**சந்திமா பிரியதர்ஷனீ கமகே,**
**நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்**
**மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.**

**இல. 9-i, ஹைலெவல் வீதி,**
**சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 0714318252**

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.02.17 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5034 | ரூ. 33,377,526.00 | U | 3 1 9 9 6 7 |
| கொவிசெத | 3276 | ரூ. 79,476,930.00 | Y | 42 67 74 75 |
| ஜாதிக சம்பத | 1489 | ரூ. 10,862,406.00 | வெற்றி இலக்கினம் | 0 4 8 9 9 6 |
| தன நிதானய | 1064 | ரூ. 84,005,517.60 | C | 03 25 38 43 |
| ராசி சுப பலன் (Handahana) | 343 | ரூ. 2,570,076.80 | சிம்மம் (விசேட இலக்கினம்: சிம்மம்) | 15 18 45 55 |
| மெகா பவர் | 1382 | ரூ. 301,097,210.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | E (சுப்பர் இலக்கம் 07) | 05 24 41 49 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — சனிக்கிழமை 2023.02.18 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5035 | ரூ. 34,325,386.00 | L | 4 6 7 7 5 4 |
| கொவிசெத | 3277 | ரூ. 79,797,578.00 | Q | 51 57 69 80 |
| ஜாதிக சம்பத | 1490 | ரூ. 10,926,304.80 | வெற்றி இலக்கினம் (கடகம்) | 0 3 9 9 7 4 |
| தன நிதானய | 1065 | ரூ. 84,005,517.60 | I | 01 49 79 80 |
| ராசி சுப பலன் (Handahana) | 344 | ரூ. 2,580,322.20 | கும்பம் (விசேட இலக்கினம்: கும்பம்) | 12 22 40 47 |
| மெகா பவர் | 1383 | ரூ. 301,461,702.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | C (சுப்பர் இலக்கம் 23) | 19 23 40 47 |



நல்லூர் சிவன் ஆலயத்தில் சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நேற்று முன்தினம் (18) மிகவும் சிறப்பாக நடைபெற்றன. இப்பூஜை வழிபாட்டில் நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர். (யாழ். நிருபர்)

# விபத்தில் உயிரிழந்த மகனின் சிறுநீரகத்தை தானமாக வழங்கிய பெற்றோர் கௌரவிப்பு





(யாழ். நிருபர்)

விபத்தில் உயிரிழந்த தமது மகனின் சிறுநீரகத்தை தானமாக வழங்கிய பெற்றோர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அதிதிகளாக வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

சடுதியான இறப்பின் பின்னர் சிறுநீரகம் போன்ற உறுப்புகளை தானம் செய்வதனால் சிறுநீரக பாதிப்பால் அவதியுறும் இன்னொருவருக்கு உயிர் வாழ சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அந்தவகையில் மேற்படி சிறுநீரக தானத்தை பெற்றோரின் ஒப்புதலுடன் அவர்கள் விருப்பத்தின்பேரில் இன்னொருவருக்கு வழங்கியமையால் சிறுநீரக செயலிழப்பால் அவதியுற்ற ஒருவர் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையின் பின்னர் சுகமாக வாழ்கின்றார்.

இதற்கு சம்மதம் தெரிவித்த பெற்றோர் அண்மையில் வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டு அவர்களால் சிறுநீரக குருதி சுத்திகரிப்பு பிரிவில் விரிவாக்கம் செய்யப்பட்ட மேலும் 3 சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திர பகுதி திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி 3 சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கியவர்களுக்கு வைத்தியசாலை சார்பில் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நன்றிகளை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவ பீடாதிபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருக்கேதீச்சர ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வு





(மன்னார் நகர் நிருபர்)

சிவபூமி மன்னார் மாதோட்டத்தின் பாலாவிக் கரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் கௌரி அம்பாள் உடனுறை கேதீச்சர நாதருக்கு மகா சிவராத்திரி திருவிழா திருக்கேதீச்சர ஆலயத்தில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்றது. இதன்போது 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். காலை 8 மணி தொடக்கம் மகாலிங்க பெருமானுக்கு தீர்த்தக் காவடி எடுக்கப்பட்டது.

அத்துடன், மாலை 3 மணிமுதல் விசேட அபிஷேகமும் 4.30 மணிக்கு மகா பிரதோஷ கால பூஜையும் இதனைத் தொடர்ந்து ஆறு சாமப்பூசை அபிஷேகங்களும் அர்ச்சனை வழிபாடுகளும் நடைபெற்றன. விசேடமாக அன்னதானம், தாகசாந்தி வழங்கல், சிறப்பு சமய சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள், பாராயணம் ஓதுதல் போன்றவையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூரில் வாள்வெட்டு; இருவர் படுகாயம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் நேற்று முன்தினம் (18) இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இரு இளைஞர்களும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணப் பொலிஸார், சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சிவராத்திரியன்று மாட்டுக்கன்றின் தலையை வெட்டி வீசிய விஷமிகள்

(யாழ். நிருபர்)

சிவராத்திரி தினமான நேற்று முன்தினம் (18) மாட்டுக்கன்றொன்றை வெட்டி அதன் தலையையும் இதர மாமிச கழிவுகளையும் வீதியில் வீசிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் கோண்டாவில் முத்தட்டுமட வீதியில் நேற்று முன்தினம் காலை மாட்டுக்கன்றின் தலையும் அதனுடன் இதர மாமிச கழிவுகளும் வீசப்பட்டு காணப்பட்டமையை அடுத்து, அப்பகுதி மக்களால் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், நல்லூர் பிரதேச சபை கழிவகற்றும் வாகனத்தின் ஊடாக கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுத்தனர்.

இந்துக்களின் புனித விரதங்களில் ஒன்றான சிவராத்திரி விரத நாளன்று மாட்டுக்கன்றை வெட்டி அதன் தலையை வீசி சென்றிருந்தமை அப்பகுதி மக்களிடம் கவலையை ஏற்படுத்தியிருந்தது.

விஷமிகளின் இந்தச் செயற்பாட்டிற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொலிஸாரிடம் கோரியுள்ளனர்.

# விலங்குகளைக் கொல்வதற்கான அனுமதிக்கு இ.தொ.கா. எதிர்ப்பு



விவசாய நிலங்களுக்குள் உட்புகும் குரங்குகள், மயில்கள், அணில்கள், பன்றிகள் மற்றும் முள்ளம் பன்றிகளை கொல்வதற்கு விவசாய அமைச்சு வழங்கியுள்ள அனுமதிக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

குரங்குகள், மயில்கள், அணில்கள், பன்றிகள் மற்றும் முள்ளம்பன்றிகளை கொல்வதற்கு வழங்கியுள்ள அனுமதியை ஏற்றுகொள்ள முடியாது. மனிதர்களுக்கு ஆபத்து விளைவிக்காது உணவை தேடி செல்லும் விலங்குகளை கொல்வது என்பது பெரிய அநீதியாகும்.

இந்த விலங்குகள் வசிக்கும் காடுகளை அழித்து கட்டடங்களை கட்டுதல் மற்றும் இயற்கைக்கு ஒவ்வாத விடயங்களை மேற்கொள்வதால் தான் விலங்குகள் உணவு பற்றாக்குறையால் தமது உணவு தேவையை பூர்த்தி செய்துகொள்ள மனிதன் வசிக்கும் பகுதிகளுக்கு வருகின்றன. ஆகவே காடுகளை அழித்து கட்டடங்களை நிர்மாணிக்க அனுமதி வழங்கிய அதிகாரியின் மீதும் திணைக்களத்தின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர விலங்குகள் மீது அல்ல. எனவே இந்த முடிவை உடனடியாக விவசாய அமைச்சு மீளப்பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# யார் பொறுப்பு?



(செ.திவாகரன்)

நானுஓயா - ரதல்ல பகுதியில் கடந்த மாதம் 20ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் ஏழு பேர் உயிரிழந்ததுடன் 53 பேர் படுகாயமடைந்திருந்தனர். இவ் விபத்தில் பலத்த சேதமடைந்த பஸ் அகற்றப்படாமல் மாதமாகியும் நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் நானுஓயா பிரதான நகரில் வீதியோரம் காட்சி பொருளாக உள்ளது.

நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட நானுஓயா நகரம் உள்நாட்டு ,வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் விரும்பும் நகரமாகும். அத்துடன் வீதியோரம் அகற்றப்படாமல் இருக்கும் பஸ்ஸினால் ஏனைய வாகன சாரதிகளிடையே விபத்து பீதியை ஏற்படுத்தி வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நானுஓயா பிரதான நகரில் விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸை அகற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வீதியை புனரமைத்துத் தருமாறு திக்கல மக்கள் வேண்டுகோள்



(அ.ரமேஸ்)

வலப்பனை பிரதேச சபைக்கு உட்பட்ட கொட்டம்ப திக்கல கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் குடும்பங்கள் தினமும் பயணிக்கும் பிரதான வீதியை மக்களின் கோரிக்கைக்கு அமைவாக மீள் புனரமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தும் அது தொடர்பில் அக்கறை காட்டவில்லை என திக்கல மக்கள் தெரிவித்தனர்.

வலப்பனை தெரிப்பெய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டம்ப, வெளிகெட்டிய, உடுகம, திக்கல,உஸ்பனாஎல்ல, மெதிகந்த என ஐந்து கிராம சேவகர் பிரிவை உள்ளடக்கி கடந்த நான்கு வருடங்களுக்கு முன் திக்கல கிராமத்தில் சுமார் 18 கோடி ரூபா செலவில் குடி தண்ணீர் வழங்கும் அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இந்த குடி தண்ணீர் திட்டத்தை நடைமுறைப்படுத்த பணிகளை மேற்கொண்டவர்கள் கொட்டம்ப சந்தியிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள திக்கல கிராம பாடசாலை வரையான பிரதான வீதியை பயன்படுத்தியுள்ளனர்.

சாதாரண வாகனங்கள் செல்லக்கூடிய வகையில் சீமெந்து கொண்டு அமைக்கப்பட்டுள்ள இவ் வீதியில் கனரக வாகனங்கள் மற்றும் பாரிய இயந்திரங்களை செலுத்தியதால் இவ் வீதி வெடிப்பு ஏற்பட்டு இப்போது மக்கள் பாவனைக்கு உதவாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த திட்டம் கடந்த நான்கு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறைவுக்கு வந்து திறப்பு விழா செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதிலும் பிரதேச மக்கள் பயன்படுத்தும் பிரதான வீதி பாவனைக்கு உதவாத வகையில் உடைந்துள்ளது.

இதன் காரணமாக காலம் தாழ்த்தாது வீதியை முழுமையாக புனரமைக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# துணைவேந்தரின் காரியாலயம் சுற்றிவளைப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சப்ரகமுவ பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டதை ஆட்சேபித்து துணை வேந்தரின் காரியாலயத்தைச் சுற்றி வளைத்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பல்கலைக்கழகம் கடந்த 16ஆம் திகதி முதல் முதலாம் வருட மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்களுக்கு மூடப்பட்டதை ஆட்சிசேபித்து மாணவர்கள் இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு மாத்திரம் கல்வி நடவடிக்கைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டு பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவித்துள்ள மாணவர்கள் துணைவேந்தருடன் கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பத்தை கோரியுள்ளனர்.

# ஹக்கல பகுதியில் டீசல் பவுசர் விபத்து

(செ.திவாகரன்)



ஹக்கல பகுதியில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் கொல்கலன் வாகனம் விபத்துக்குள்ளானது.

எரிபொருள் பவுசருக்குள் சாரதியும், உதவியாளரும் இருந்துள்ளனர். இருவரும் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொலன்னாவை எரிபொருள் களஞ்சியசாலையிலிருந்து - கெப்பட்டிபொல எரிபொருள் நிலையத்திற்கு டீசல் ஏற்றிச் சென்ற பவுசரே ஹக்கல பூங்கா பகுதியில் சுமார் 80 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

சீரற்ற காலநிலையால், வீதியில் ஏற்பட்ட வழுக்கல் தன்மையால் சாரதியின் கட்டுப்பாட்டைமீறி வாகனம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. குறித்த பவுசரில் 13 ஆயிரத்து 200 லீற்றர் டீசல் இருந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# யாழ். போதனா வைத்தியசாலை குடிநீரில் கிருமித்தொற்று; ஊடகங்களுக்கு தகவல் மறைக்கப்பட்டதற்கு காரணமென்ன?

## அமைச்சிடம் விளக்கம் கோருகிறது ஜனாதிபதி ஊடகப்பிரிவு

PMD
ජනාධිපති මාධ්‍ය අංශය
ஜனாதிபதி ஊடகப் பிரிவு
PRESIDENT'S MEDIA DIVISION

யாழ். போதனா வைத்தியசாலையின் குடிநீரில் கிருமித் தொற்று உள்ளதாக தகவல்கள் வெளியாகிய நிலையில் பரிசோதனை மேற்கொண்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். மாவட்ட பொறியியலாளர் ஊடகங்களுக்கு தகவலை வழங்காது ஏன் மறைத்தாரென ஜனாதிபதி ஊடகப்பிரிவு அமைச்சிடம் விளக்கம் தருமாறு கோரியுள்ளது.

வைத்தியசாலையில் மக்கள் பயன்படுத்தும் குடிநீரில் கிருமித்தொற்று பரவியுள்ளதாக தகவல்கள் வெளியாகிய நிலையில், குடிநீரின் மாதிரி யாழிலுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தால் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாவட்ட அதிகாரியை தொடர்புகொண்ட ஊடகவியலாளர்கள், போதனா வைத்தியசாலை குடிநீரில் கிருமித்தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதா? என மாவட்ட பொறியியலாளர் ஜெகதீஸ்வரனை வினவியிருந்தார்கள்.

எனினும், குறித்த அதிகாரி அது இரகசியமானது, வெளியிட முடியாது என பதில் அளித்திருந்தார்.

இருப்பினும் ஊடகவியலாளர்கள் இது பொதுமக்கள் சம்பந்தப்பட்ட விடயம். தனிப்பட்ட வீட்டின் குடிநீர் பிரச்சினை அல்ல, மக்களை விழிப்படையச் செய்வதற்கு குறித்த அறிக்கை தொடர்பில் தெளிவுபடுத்துமாறு கோரினர்.

எனினும் குறித்த அதிகாரி சட்டச்சிக்கல் வந்தாலும் பகிரங்கப்படுத்த முடியாது என பதிலளித்திருந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரதானிக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். மாவட்ட பொறியியலாளர் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து தொடர்பில், அமைச்சிடம் எழுத்து மூலமான விளக்கத்தை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார். ஊடகங்களுக்கு தகவல் வழங்க மறுக்கப்பட்டமை தொடர்பில் கேட்டறிந்துகொண்ட அமைச்சர், பிராந்திய செய்தியாளரை தொடர்புகொண்டு உரிய அதிகாரிகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டார்.




### Internship/Banking Trainees

Bank: Commercial Bank
Web: www.combank.lk

### Local Guard Shift Supervisor (Male/Female)

Institution: US Embassy, Colombo
Apply: https://lk.usembassy.gov/embassy/jobs

### Internal Auditor/ Accounts Clerk

Institution: Colombo YMBA
Email: admin@colomboymba.com

### Marketing Manager

Company: Indoscan PVT Ltd
Address: Head Of Human resource, Indoscan PVT Ltd, 441/2A, 2nd Lane, Kotte Road, Rajagiriya.

### Digital Sales/Marketing Executive (Female)

Company: KDG Global
Industry: Gem and Jewellery
Email: careers@kdgglobal.com

### Lecturers for Diploma in English

Institution: BIMT Campus
Email: info@bimt.lk

### Social Media & Marketing Executive

Company: Ecom Services Lanka PVT Ltd
Email: hr@ecom.services

### Librarian

Institution: The Bandaranayaike Centre for International Studies
Email: careers@bmich.com

### Customs Data Entry Operator / Sales Executive / Wharf Executive

Company: Skyline Logistics PVT Ltd
Email: skylinelogisticscolombo@hotmail.com

### Graphic Designer

Institution: British Way English Academy
Location: Nittambuwa
Email: vacancy.britishway@gmail.com

### Intern – Human Resources

Company: V S Information System PVT Ltd
Address: Head of Human Resources, V S Information System PVT Ltd, 07, Suleiman Terrace, Colombo 05.

### Digital Marketing Executive

Company: eBeyonds
Email: jobs@ebeyonds.com

### Data Entry Operators

Company: TR Associates
Email: mkncorporates@gmail.com

### Sales Executives

Company: Eureka Australian Migration Experts
Email: careers.eureka@gmail.com

# யாழில் சர்வமதத் தலைவர்களிடம் ஆசிபெற்ற தமிழ் மக்கள் கூட்டணி




தேர்தல் பிரசாரத்தை தொடங்கும் பொருட்டு தமிழ் மக்கள் கூட்டணியினர் நேற்று முன்தினம் (18) சர்வமதத் தலைவர்களிடம் ஆசிர்வாதம் பெற்றனர்.

முன்னதாக, யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், நல்லூர் ஆலயத்திற்கு பின்புறமாக உள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் மாலை 2.30 மணியளவில் சுடரேற்றி மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நல்லை ஆதீனம் குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சிவகுரு ஆதீனத்தின் தவத்திரு வேலன் சுவாமிகளிடமும் ஆசீர்வாதம் பெற்றனர்.

இதன்போது, தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்ட தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# காலநிலை நிதியுதவிக்கான 2023இற்கான திட்ட வரைபடத்தைத் தயாரிக்கும் பசுமை நிதிக்குழு



2023ஆம் ஆண்டில் பசுமை நிதித் திட்டங் களுக்கு நிதி திரட்ட, ஒரு வலுவான திட்ட வரைபடத்தை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன தலைமையில் பசுமை நிதிக் குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ருவான் விஜேவர்தன தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (17) ஜனாதிபதி அலுவலகத்தில் இதற்கான ஆரம்பகட்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

காலநிலை மாற்றத்தில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவும் குறைந்த கார்பன் பொருளாதாரத்தை நோக்கி நகரவும் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கும் பசுமை நிதிக் குழு பணியாற்றவுள்ளது.

பசுமை நிதியத்தின் திட்ட வரைபடம், Green Finance, Green Bonds, Climate Finance போன்ற தற்போதைய செயல்முறைகள் அடங்கிய ஒரு தெளிவான நோக்கம், செயல்பாடு மற்றும் இலக்குகளுடன் ஒரே தளத்தில் ஒன்றிணைப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் குறித்த கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜேவர்தன, மேலதிக செயலாளர் வெர்னன் பெரேரா உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச்சென்ற இரு இளைஞர்கள் கைது

(மொனராகல நிருபர்)

பிபில கரடுகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரடுகல பிரதேசத்தில் மோட்டார்சைக்கிளில் வந்து பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை திருடிச்சென்ற இரு இளைஞர்களை மொனராகலை பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நேற்று முன்தினம் (18) கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது பிபில பல்லேராவ மற்றும் கவுடெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 22 மற்றும் 23 வயதுடைய இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நீதிமன்ற உத்தரவின்பேரில் அடகுவைக்கப்பட்ட தங்க நகையை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். மேலும் கொள்ளைக்கு பயன்படுத்திய மோட்டார்சைக்கிளையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

சந்தேக நபர்கள் பிபில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக கராடுகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



ஜனநாயக தேர்தலொன்றை தருமாறு கோரி, தேசிய மக்கள் சக்தி கட்சியினர் நேற்று (19) மஹரகமவில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தினர்.

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கு ஐம்பொன் சிலை அன்பளிப்பு




மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கு 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான ஐம்பொன் சிலை அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (18) சனிக்கிழமை யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான ஐம்பொன்னிலான சிவகாமி சிலை அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஐடியல் மோட்டர்ஸ் (மகேந்திரா) நிறுவனத்தின் நிறுவுனர் நளின் வெல்கம சிவகாமி சிலையினை ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்துவைத்தார்.

# மாணிக்க கங்கையில் நீராடச்சென்ற பிக்குவை முதலை தாக்கியதில் காயம்

## யாத்திரிகர்களை அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள்

(கெலும் குணதிலக்க)

பேருவளையிலிருந்து யாத்திரிகர்கள் குழுவுடன் கதிர்காமத்திற்கு வந்த பிக்கு ஒருவர் கதிர்காமம் விகாரைக்கு செல்லும் இரண்டாவது பாலத்திற்கு அருகிலுள்ள மாணிக்க கங்கையில் கடந்த வெள்ளிக்கிழமை (17) குளித்துக்கொண்டிருந்தபோது முதலை ஒன்று அவரை பிடிக்க முற்பட்டதில், காயங்களுடன் உயிர் தப்பினார்.

குறித்த பிக்கு குளித்துக்கொண்டிருந்தபோது, தண்ணீரிலிருந்து வெளியே வந்த முதலை, பிக்குவை பிடிக்க முற்பட்டவேளை, பிக்கு தடுக்க முயன்று கை விரல்களைக் கடித்ததில் காயம் ஏற்பட்டது.


அருகிலிருந்த பணியாளர்கள் பிக்குவை கதிர்காமம் வைத்தியசாலையில் சேர்த்தனர். கதிர்காமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடும்போது பக்தர்கள் அவதானமாக இருக்குமாறு கதிர்காமம் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக, இரவுநேரங்களில் மாணிக்க கங்கையில் நீராட வேண்டாம் என்றும், சிறு குழந்தைகளை மாணிக்க கங்கையில் இறங்க அனுமதிக்க வேண்டாம் என்றும் பக்தர்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# யாழ். கீரிமலை, நகுலேஸ்வர ஆலய முத்தேர் இரதோற்சவம்



வரலாற்றுச் சிறப்புமிக்க பஞ்ச ஈஸ்வரங்களின் ஒன்றான யாழ். கீரிமலை, நகுலேஸ்வர், நகுலாம்பிகை தேவஸ்தானத்தின் முத்தேர் இரதோற்சவம் நேற்று முன்தினம் (18) மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

கருவறையில் வீற்றிருக்கும் நகுலேஸ்வர், நகுலாம்பிகை ஆகிய தெய்வங்களுக்கும் வசந்த மண்டபத்தில் அருள்பாலித்து விளங்கும் விநாயகர், வள்ளி, முருகன் தெய்வானை ஆகிய தெய்வங்களுக்கு அபிஷேகம், ஆராதனைகள் என்பன இடம்பெற்று உள்வீதியூடாக பீடத்தில் வீற்று, வெளி வீதியில் முத்தேர் ஏறி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

இவ்வாலயத்தின் கொடியேற்ற உற்சவம் கடந்த 10.02.2023 அன்று ஆரம்பமாகி நேற்று (19) சமுத்திரத் தீர்த்த உற்சவத்துடனும், மாலை கொடியிறக்கத்துடனும் இனிதே திருவிழா நிறைவடைந்தது.

இக்கிரியைகளை ஆலய பிரதமகுரு ஸ்ரீ இராஜராஜ குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கலந்துகொண்டு நடத்திவைத்தனர்.

மகாசிவராத்திரி நன்நாளில் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்த பக்தர்கள் கலந்துகொண்டு இஷ்ட சித்திகளை பெற்றுச்சென்றனர்.

# கிழக்கில் இடம்பெற்ற சிவராத்திரி பூஜை நிகழ்வுகள்


பெரியகல்லாறு ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயம்




காரைதீவு ஆதிசிவன் ஆலயம்





(படங்கள்:- கல்லாறு, காரைதீவு, மூதூர் செய்தியாளர்கள்)


திருகோணமலை திருமங்களாய் சிவன் ஆலயம்



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com







மகா சிவராத்திரியை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரும் ஆதிசிவன் ஆலய நிர்வாக சபையினரும் இணைந்து அறநெறி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்பட்ட ஆக்கத்திறன் நிகழ்வுகளின்போது... (மாளிகைக்காடு செய்தியாளர்)







மட்டக்களப்பு புது முகத்துவாரம் ஸ்ரீ காயத்ரி பீட வளாகத்தில் அமைந்துள்ள சப்தரிஷி ஆலயத்தில் மகா சிவராத்திரி நிகழ்வும், புண்ணிய தீர்த்த அபிஷேகமும், திருவாசக முற்றோதலும் இடம்பெற்றபோது... (கல்லடி செய்தியாளர்)

## மட்டுவில் இரு வெவ்வேறு விபத்துகளில் இருவர் பலி

(மண்டூர் செய்தியாளர்)

மட்டக்களப்பில் இரு வெவ்வேறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இடம் பெற்ற வீதி விபத்துகளில் இரு குடும்பஸ்தர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மோட்டார் சைக்கிள் விபத்தில் மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பொன்னையா இராஜேந்திரன்(வயது70) கடந்த 09 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமுற்று வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் 17ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொறுகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான சங்கரப்பிள்ளை அருள்ராசா என்பவர் அன்றைய தினம் இடம்பெற்ற விபத்தில் சிக்கி சிகிச்சை பலனின்றி 18ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர்கள் இருவரும் வீதியைக் கடக்க முற்பட்டபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலும் மற்றும் இரு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதிலும் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணைஅதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மற்றும் வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிண்ணியா வட்டமடு பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை


(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டமடு பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். ஆயிலியடி - வட்டமடு பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாது பள்ளமும் படுகுழியுமாகவும் சேறும் சகதியும் நிறைந்ததாகவும் காணப்படுவதாக அவ்வீதியால் போக்குவரத்துச் செய்வோர் தெரிவிக்கின்றனர்.

வட்டமடு வீதியானது சுமார் மூன்று கிலோமீற்றர் வரை சேதமடைந்து காணப்படுகின்றது. இவ்வீதியால் மோட்டார் சைக்கிளில் தினமும் பயணம் செய்வோர் சிரமங்களுக்கு மத்தியில் தமது பயணத்தை முன்னெடுத்து வருகின்றனர். மழைக் காலங்களில் பாடசாலை மாணவர்கள் உட்பட தொழிலுக்குச் செல்வோர் போக்குவரத்துகள் மேற்கொள்ள முடியாது சிரமப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே, கிண்ணியா வட்டமடு பிரதேசத்தின் வீதியை விரைவில் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

## குருதிக்கொடை நிகழ்வு

(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு அரச அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் வழிகாட்டலின்கீழ் இன்று (20) காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசரப் பிரிவில் ஏற்படுகின்ற இரத்தப் பற்றாக்குறையை கருத்திற்கொண்டு அதனை நிவர்த்திசெய்யும் நோக்கில் 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்'எனும் தொனிப்பொருளில் இரத்ததான முகாம் மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இரத்ததான நிகழ்விற்கு இராணுவம், பொலிஸ், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் மாவட்ட செயலகம், நில அளவைத் திணைக்களம், வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## தக்வா ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம்





(அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புச் செய்யும் நோக்கில், அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆப் பள்ளிவாசலினால் ஏற்பாடுசெய்யப்பட்ட மாபெரும் இரத்ததான முகாம் பள்ளிவாசலில் சனிக்கிழமை (18) நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.சனூபரின் வேண்டுகோளுக்கிணங்க, தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் எம்.எம்.றியாடின் ஒருங்கிணைப்பில் இரத்தப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இம் முகாமில் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸின் தலைவருமான ஏ.எல்.எம். அதாவுல்லா, அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி, மாவட்ட நீதிபதி என்.எம்.அப்துல்லாஹ், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் வை.றாசீத், பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றாசீக், ஆயுர்வேத வைத்திய பொறுப்பதிகாரி டொக்டர் கே.எல்.எம்.நக்பர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் பிரதிநிதிகள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கியதுடன், இதில் இரத்த கொடையாளர்கள் 282 பேர் ஆர்வத்தோடு கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியதுடன் 248 இரத்த சேகரிப்புகள் அன்பளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பேரவை உறுப்பினராக டாக்டர் பரீத் நியமனம்

(எருவில் செய்தியாளர்)



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பேரவை உறுப்பினராக டாக்டர் ஏ.எல்.பரீத் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள இவர், 35 வருட காலமாக வைத்தியத்துறையில் அளப்பரிய சேவையாற்றி வருவதுடன் தற்சமயம் கொழும்பு நவலோக வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரியாகவும் சேவையாற்றி வருகின்றார்.

## ஜப்பான் தூதுவருடனான உத்தியோகபூர்வ சந்திப்பு


(கிண்ணியா செய்தியாளர்)

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தலைமையிலான உயர்மட்ட குழுவினர் மற்றும் திருகோணமலை மாவட்ட சர்வமதக் குழு முக்கிய உறுப்பினர்கள் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று வியாழக்கிழமை (16) மாலை திருகோணமலை புளுபி சினமன் ஹோட்டலில் இடம்பெற்றது.

இதன்போது சர்வமதக் குழு பற்றிய செயற்பாடுகள், திருகோணமலை மாவட்ட காணிப் பிரச்சினைகள், 13ஆவது சீர்திருத்தத்தை நடைமுறைப் படுத்தல், தகவல் அறியும் சட்டத்தை வலுப்படுத்தல் மற்றும் திருகோணமலை மாவட்ட மக்களின் பிரச்சினைகள் உள்ளிட்டவை கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வாய்ப்புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு


(பொத்துவில் செய்தியாளர்)

வாய்ச்சுகாதாரம் மற்றும் வாய்ப்புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வெள்ளிக் கிழமை (17) இடம்பெற்றது.

வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் எம்.எம்.எம்.றஹீம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பல் வைத்தியர்களான ஏ.ஆர்.எம்.கடாபி, எம்.ஆர்.ஜி.என்.குமாரி, எஸ்.என்.டயஸ் ஆகியோர் வாய்ச்சுகாதாரம் மற்றும் வாய்ப்புற்று நோய் தொடர்பாக விளக்கமளித்தனர்.

இதன்போது தாதிய பரிபாலகர் பீ. ரகுநாத மூர்த்தி, விடுதி முகாமையாளர் எம்.எம். அமானுல்லா ஆகியோருடன் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் நோயாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் முயற்சியின் பயனாக பிரதேச வர்த்தகர்கள், பொதுமக்கள் வழங்கிய நிதிப்பங்களிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட ஜனாஸா வாகன அறிமுக நிகழ்வு, மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் ஏ.எல்.இந்தியாஸ் தலைமையில் அந்நூர் கலாசார மண்டப முன்றலில் வெள்ளிக்கிழமை (17) மாலை இடம்பெற்றது. (மாளிகைக்காடு செய்தியாளர், பாறுக் ஷிஹான்)

## காலநிலை மாற்றத்தினால் விவசாயிகள் பெரும் பாதிப்பு

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் சனிக்கிழமை இரவு பெய்த கனமழையால் அறுவடை தாமதமடைந்ததோடு விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

துரித அறுவடை பல பகுதிகளில் இடம்பெற்றுவந்த நிலையில் கன மழை விவசாயிகளுக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தாழ்நில பிரதேசங்களில் நீரால் சில இடங்கள் மூழ்கியும் காய்ந்த நெல் மற்றும் மழைநீரில் நனைந்த நெல் என்பன வெவ்வேறு விலைகளில் கொள்வனவு செய்யும் நிலையும் காணப்படுவதால் விவசாயிகள் மூலதனத்தைக்கூட இழக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான மக்கள் தமது ஜீவனோபாய தொழிலாக விவசாயத்தை நம்பிய நிலையில் காலநிலை மாற்றம் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சமும் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.





அட்டாளைச்சேனை பொதுமக்கள் மீன் சந்தை இல்லாமல் பல வருடங்களாக கூடாரங்களுக்குள் மீன் விற்பனை செய்துவந்த நிலையில், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முயற்சியில் நிரந்தரமான மீன் சந்தை கட்டடம் அமைக்கப்பட்டு சனிக்கிழமை (18) பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. (திராய்க்கேணி செய்தியாளர்)


# படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்கக்கோரி மட்டக்களப்பில் போராட்டம்




***(காத்தான்குடி செய்தியாளர்)***

"படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்கள்" என்ற தொனிப் பொருளிலான போராட்டமொன்று சனிக்கிழமை (18) மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெற்றது. கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ். ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் சங்கம் மற்றும் தெற்கு ஊடக அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா), மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் மற்றும் ஊடகவியலாளர், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



***தமிழ்நாட்டு பழ. நெடுமாறன் சொன்ன கருத்தால நாட்டில் மீண்டும் இனவாதம் தோன்றுமாம் எண்டு இப்ப விளக்குப்பிடிக்கிற EPRLF தம்பி மண்டையன் சுரேஷ் சொல்லியிருக்காரு எலுவா?***

***அடே இலங்கயில இனவாதம் இல்லாம மறுகா என்ன பார்சவாதமா இருக்கு?***

***பிரபாகரன் உசிரோட இருந்து தச்சேலா வந்தா ஒங்கட டுப்பிளிகேட் DTNA கட்சிற சில்லறயத்தான் ஒரு கை பார்ப்பாரு கவனம்டா தம்பி! அவரு வரக்கூடாது எண்டு கடவுள வேண்ட சொல்லி TELO செல்வத்தாரிட காதுலயும் ஊதுடாம்பி..!***

# படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்கள்

### ஊடக அமைப்புகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை மனு



***(மட்டக்களப்பு செய்தியாளர்)***

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குமாறு கோரி மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அமைதியான முறையில் சனிக்கிழமை(18) மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்குவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரமிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கு - கிழக்கில் ஊடக சுதந்திரத்தைப் பேண தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளை, கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களுக்கான சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்படவேண்டுமென்பதில் நாம் சமரசம் செய்துகொள்ள தயாராக இல்லையென தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேவேளை, படுகொலைசெய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு ஊடகவியலாளரின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.


இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளை கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ். ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம், வடக்கு கிழக்கு, தெற்கு ஊடக அமைப்புகள் தொடர்ச்சியாக கண்டித்தே வந்துள்ளன.

2000ஆம் ஆண்டில் பிபிசி செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையுடன் அரங்கேறிய ஊடகப்படுகொலைகள் நீண்டே சென்றிருந்தன. தமிழர் தாயகப்பகுதிகளில் பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. ஆனாலும் அந்த தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கைதுசெய்யப்படவோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை என்பது அனைவரும் அறிந்ததொரு உண்மையாகும். வடக்கு, கிழக்கில் ஊடக சுதந்திரத்தைப் பேண நாம் தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளை, கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களுக்கான சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்பட வேண்டுமென மீண்டும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை, நல்லாட்சிக் காலத்தில் தாங்கள் பிரதமராக இருந்த காலப்பகுதியில் கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களது குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக இழப்பீடு ஒன்றை வழங்க முன்வந்து விசாரணைக் குழுவொன்றையும் அமைத்திருந்தீர்கள். குழுவும் விசாரணைகளை முன்னெடுத்தபோதும் ஆட்சி மாற்றத்தின் பின்னராக அது கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

பின்னராக கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவ்வாறு விசாரணைக்குழுவே நியமிக்கப்பட்டிருக்கவில்லையென வாதிடப் பட்டிருந்தது. எனினும், தற்போது தாங்கள் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள நிலையில் தங்களால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்குழு பரிந்துரைகளின் பிரகாரம் கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களது குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணத்தை வழங்குவதில் கவனத்தை செலுத்த கேட்டுக்கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com



*பன்சேனை பிரதேசத்தில் யானை வேலி புனருத்தாரணம் பொதுமக்களின் பங்களிப்புடன் 17 மில்லியன் ரூபா செலவில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் யூ.எல்.தவ்பீக் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.* **(புளியந்தீவு செய்தியாளர்)**

# கடலரிப்புக்குள்ளாகிய நிலையில் மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி!

***(பாறுக் ஷிஹான்)***


AL-MEEZAN FOUNDATION, SRI LANKA
அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீ லங்கா

அம்பாறை மாவட்ட மாளிகைக் காடு பிரதேச ஜனாஸா மையவாடி கடலரிப்புக்குள்ளாகி பாவிக்க முடியாத நிலைக்கு நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது. உடனடியாக மாற்று இடத்தில் புதிய ஜனாஸா மையவாடியை அமைக்கவேண்டிய தேவை உள்ளதால் உடனடியாக புதிய காணியொன்றை இதற்காக பெறவேண்டியுள்ளது. இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுத்து புதிய காணியொன்றை வழங்குமாறு கோரி ஜனாதிபதி, பிரதமர், காணியமைச்சர், உள்நாட்டலுவல்கள் அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை அரசாங்க அதிபர், காரைதீவு மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு மாளிகைக்காடு அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா அமைப்பு கோரிக்கை முன்வைத்துள்ளது.

கிழக்கு மாகாண அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் காரைதீவு பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட மாளிகைக்காடு கிராம மக்களின் ஜனாஸா மையவாடி கடலரிப்பில் முழுமையாக சேதமாகியுள்ளதுடன், ஜனாஸாக்கள் கடலில் அள்ளுண்டுபோன வரலாறுகளும் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன.

மாளிகைக்காடு ஜும்ஆப் பெரியபள்ளிவாசலின் பராமரிப்பிலுள்ள அந்நூர் ஜனாஸா அடக்கஸ்தலம் மோசமான கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாக்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டு வருகின்றன. மாளிகைக்காடு மக்கள் முழுமையாகவும் சாய்ந்தமருது மக்களில் சில பகுதியினரும் அடங்கலாக 10 ஆயிரம் மக்கள் அளவில் பாவிக்கும் இந்த மையவாடியை தொடர்ந்தும் பாவிக்க முடியாத நிலையில் உள்ளது.

இது தொடர்பில் அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா அமைப்பின் தவிசாளர் கருத்து தெரிவிக்கையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சுமார் 90 இலட்ச ரூபா நிதியொதுக்கீட்டில் சில மாதங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட தடுப்புச்சுவர் கடலில் முழுமையாக அடித்துச் செல்லப்பட்டுள்ளது. எந்தவொரு தற்காலிக நடவடிக்கையும் இந்த சிக்கலை தீர்க்காது.

இது தொடர்பில் அரச உயர் மட்டங்களுக்கும் தெளிவான விளக்கத்துடன் கூடிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். இந்நிலை தொடர்ந்தால் இன்னும் சில மாதங்களில் ஜனாஸா நல்லடக்கம் செய்ய இடமில்லாமல் மக்கள் திண்டாடும் நிலை உருவாகும். அண்மையில் உள்ள மையவாடிகளும் அடர்த்தியால் ஒத்துழைக்க முடியாத நிலை உருவாக்கலாம். எனவே, இது தொடர்பில் அவசர நடவடிக்கை தேவை - என்றார்.

# அனைத்து நாடுகளும் இணைந்து வடக்கு, கிழக்கு தாயகத்தை தலைவரின் கைகளில் வழங்கும் என்பதே எமது எதிர்பார்ப்பு

### புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவர் இன்பராசா



***(கனகராசா சரவணன்)***

போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் இன்றுவரை விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியில் இயங்கவில்லை என்ற ரீதியில் நாங்கள் நேர்மையானவர்கள், நேர்த்தியானவர்கள் என்ற அடிப்படையை புரிந்துகொண்டு எமது தேசிய தலைவரின் கோட்பாட்டின் கீழ் ஜனநாயக ரீதியில் அனைத்து நாடுகளும் இணைந்து தலைவரின் வழிநடத்தலில் வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தை அவரின் கைகளில் வழங்குமென நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம் என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவர் கே. இன்பராசா தெரிவித்தார்.

அம்பாறை காரைதீவில் வெள்ளிக்கிழமை (17) இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலைவர் இல்லை என்று அரசாங்கம் சொல்லட்டும். இன்று காணாமலாக்கப்பட்டவர்கள் இல்லை, கைதுசெய்யப்பட்டவர்கள் இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களில் சிலர் தற்போது வந்தார்கள், கைதுசெய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டும் இருக்கின்றார்கள். ஒரு விடுதலையை நோக்கிப் போராடிய இயக்கம். போராட்டம் மௌனிக்கப்பட்டு இன்று 13 வருடங்களாக எந்தவித ஆயுதமேந்திய போராட்டங்களையும் மேற்கொள்ளாத நிலையில் எமது இயக்கத்தின் போராட்டத்தை சர்வதேசம், ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்க வேண்டும். அந்த இயக்கம் எதற்காகப் போராடியதோ அந்த உரிமையைக் கொடுக்க வேண்டும்.

எங்கள் தேசிய தலைவர் ஒட்டுமொத்த போராளிகள் மட்டுமல்ல, எமது மக்களின் இதயத்தில் அன்றுதொட்டு இன்று மட்டுமல்ல என்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார். அவர் இல்லை என்று சொல்வதற்கு எவருக்கும் அருகதை இல்லை. இன்று நடக்கின்ற விடயங்கள் எல்லாம் எமது தலைவர்களால் தீர்க்கதரிசனமாக 1990களிலேயே சொல்லப்பட்டவை. ஒரு கட்டத்தில் எமது போராட்டம் பல நாடுகளின் உதவியுடன் நசுக்கி ஆயுதம் மௌனிக்கப்பட்டும், பின்னர் ஒரு குறிப்பிட்ட காலம் தலைவர் இருக்கின்றாரா இல்லையா என்ற சர்ச்சை வரும். அக்காலத்தின் பின் எமது தலைவரின் பெயர் ஏதோவொரு வகையில் வெளிவரும்.

அந்த சமயத்தில் சர்வதேசத்தின் மத்தியஸ்தத்துடன் வடக்கு, கிழக்கு இணைந்த தீர்வொன்று தலைவர் ஊடாக பெற்றுக் கொடுக்கப்படும் என அன்று கபில அம்மான் எமக்கு பாடம் கற்பிக்கும்போது தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டது.

விடுதலைப் புலிகள் தலைவருடன் பழ.நெடுமாறன் 40 வருடகாலமாக நெருங்கிய தொடர்புடையவர். அவருக்கு மேலிடத்திலிருந்து அனுமதி வந்திருக்கலாம். அதேவேளை, தலைவர் கிருஷ்ணர் வரம் பெற்றவர். என்றுமே அவருக்கு சாவு இல்லை. அவர் மீண்டும் மக்கள் மத்தியில் வருவாராக இருந்தால் அது ஜனநாயக ரீதியில் எமது மக்களின் இனவிடுதலைக்கான முன்னெடுப்புகளுடன் வெளிநாட்டு மத்தியஸ்தத்துடனேயே அவர் தோற்றம் பெறுவார் - என்றார்.

## புனானையில் 7 இலட்ச ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை திருடிய இளைஞன் கைது

***(கனகராசா சரவணன்)***

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள புனானை பகுதியில் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் வீட்டிலிருந்து 7 இலட்சத்து 20ஆயிரம் ரூபா பெறுமதியான 4 பவுண் தங்க ஆபரணங்களை திருடிச் சென்ற நபர் ஒருவரை சனிக்கிழமை (18) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் வீட்டில் கடந்த டிசம்பர் மாதம் 25ஆம் திகதி வீட்டில் அனைவரும் இருந்துள்ள நிலையில் அங்கு வந்து சென்ற நபர் அங்கிருந்து தங்கச்சங்கிலி, காப்பு, தோடு என்பவற்றை திருடிச் சென்றுள்ளார்.

இந்நிலையில், பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் திருடப்பட்ட தங்க ஆபரணங்களை நீர்கொழும்பில் உள்ள அடகு கடைகளில் வைத்து 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பெற்றுள்ளதாகவும் அவற்றை கைப்பற்றுவதற்காக நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் பிற்போடுவதை ஏற்க முடியாது

### ரிஷாட் பதியுதீன் எம்.பி.

***(கிண்ணியா செய்தியாளர்)***

"மக்கள் எதிர்பார்த்த ஒரு தேர்தலை, உரிய நேரத்தில் நடத்த வேண்டியதொரு தேர்தலை ஜனநாயக ரீதியான தேர்தலை நடத்தாமல் அரசாங்கம் சாக்குப்போக்குகளைச் சொல்லி பிற்போடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது" - என முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

திருகோணமலை, நிலாவெளி பகுதியில் வெள்ளிக்கிழமை (17) மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டில் காலிமுகத்திடல் போராட்டம் இடம்பெற்று அதனூடாக 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி விரட்டப்பட்டிருக்கிறார். பிரதமர் அகற்றப்பட்டுள்ளார். அமைச்சரவையில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. மக்கள் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில், மின்சார பட்டியல் அதிகரிப்பு, அத்தியாவசிய விலை அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் என பல சுமைகளை போட்டு சாக்கு போக்குகளை வைத்து தேர்தலை பிற்போட முயற்சிக்கிறது.

இவ்வாறானவற்றை எமது கட்சி, தேர்தல் ஆணைக்குழுவில் எடுத்துச் சொல்லியிருக்கிறது. எது எவ்வாறாயினும் ஜனநாயக நாட்டில் ஜனநாயக ரீதியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் ஒருமித்த நிலைப்பாடாகும். இதற்காக உரிய நேரத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் தொடர்ச்சியாக ஜனநாயக ரீதியான போராட்டங்களும் தொடரும் - என்றார்.

# இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு பதிலடி கொடுத்த இலங்கை 'ஏ' அணி



சுற்றுலா இங்கிலாந்து லயன்ஸ் மற்றும் இலங்கை 'ஏ' கிரிக்கெட் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் போட்டியில் இலங்கை 'ஏ' அணி 86 ஓட்டங்களால் வெற்றியீட்டி பதிலடி கொடுத்தது. இந்த வெற்றியுடன் இன்னும் ஒரு போட்டி மீதமிருக்க 1-1 என தொடர் சமநிலையாகியுள்ளது.

கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை 'ஏ' அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 315 ஓட்டங்கள் எடுத்தது.

வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 316 ஓட்டங்களை அடைய பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து லயன்ஸ் அணி 39.1 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 229 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து போட்டியில் தோல்வியைத் தழுவியது.

இலங்கை 'ஏ' – இங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்கிடையிலான தொடரைத் தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் போட்டி நாளை நடைபெறுகின்றது.

## இந்தியாவிடம் மீண்டும் மண்டியிட்ட ஆஸி.

சுற்றுலா ஆஸி. அணியுடனான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியீட்டி தொடரில் 2-0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளதுடன், ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பையும் அதிகரித்துள்ளது.

டில்லியில் நேற்று நிறைவுக்கு வந்த இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி முதல் இன்னி ங்ஸில் 263 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 113 ஓட்டங் களையும் குவித்தது. அந்தவகையில் 115 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய இந்திய அணி 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியீட்டியது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# 15 ஆண்டுகளின் பின்னர் இமாலய வெற்றியீட்டிய இங்கிலாந்து



நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 267 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 15 ஆண்டுகளின் பின்னர் இங்கிலாந்து இமாலய வெற்றி பெற்றது.

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 325 ஓட்டங்களும், நியூசிலாந்து 306 ஓட்டங்களும் எடுத்தன. பின்னர் இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து 374 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ஜோ ரூட் 57 ஓட்டங்களும், ஹரி ப்ரூக் 54 ஓட்டங்களும் எடுத்தனர். இதன்மூலம் நியூசிலாந்து அணிக்கு 394 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. கடைசி நாள் ஆட்டத்தில் இங்கிலாந்தின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 126 ஓட்டங்களுக்கு நியூசிலாந்து சுருண்டது.

இதனால் 267 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து இமாலய வெற்றிபெற்றது.

நியூசிலாந்து மண்ணில் 2008ஆம் ஆண்டுக்குப் பின் இங்கிலாந்துக்கு கிடைத்த முதல் வெற்றி இதுவாகும். முதல் இன்னிங்ஸில் 89 ஓட்டங்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 54 ஓட்டங்களும் எடுத்த ஹரி ப்ரூக் ஆட்டநாயகன் விருது பெற்றார்.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரனின் நிதி அனுசரணையில் வட்டகொடை மடக்கும்புற வடக்கிமலை தோட்ட மைதானத்தில் நடைபெற்ற ரமேஸ் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பதுளை நமுனுகொல கரப்பந்தாட்ட அணி முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தையும் ஒரு இலட்ச ரூபா வெற்றித் தொகையையும் பெற்றுக்கொண்டது.

(படம் – தலவாக்கலை நிருபர்)

# மூன்று இடங்களுக்கு பத்து நாடுகள் போட்டி

(ரமணி)

மகளிர் உலகக் கிண்ணப் போட்டியில் தகுதிபெறுவதற்காக 10 நாடுகள் காத்திருக்கின்றன். பிளே-ஓவ் போட்டிகளில் வெற்றிபெறும் மூன்று நாடுகள் உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடுவதற்குத் தகுதி பெறும். கடந்த சனிக்கிழமை நடந்த பிளே-ஓவ் தொடக்க ஆட்டத்தில் கமரூன் 2-0 என்ற கோல் கணக்கில் தாய்லாந்தையும் ஹெய்ட்டி 4-0 என்ற கோல் கணக்கில் செனகலையும் தோற்கடித்தன.

பிளே-ஓவ்களில் 10 அணிகள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் குழு வெற்றியாளர்கள் மட்டுமே அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியன இணைந்து நடத்தும் 32 அணிகள் கொண்ட உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளன. .

பிளே-ஓவ்கள் ரவுண்ட்-ராபின் முறையில் விளையாடப்படாது. மாறாக, போர்த்துக்கல், கெமரூன், தாய்லாந்து ஆகிய அணிகளுக்கிடையே நடைபெறும் போட்டியில் வெற்றிபெறும் அணி குரூப் 'ஏ' பிரிவில் இடம் பிடிக்கும்.

குழு 'டீ'இல் விளையாட செனகல், ஹெய்ட்டி, சிலி ஆகியன மோதுகின்றன. அதே நேரத்தில் 'ஊ' குழுவில் சீன தைபே VS பராகுவே மற்றும் பப்புவா நியூ கினியா VS பனாமா ஆகியன காத்திருக்கின்றன

கெமரூன் இப்போது போர்த்துக்கல் மற்றும் ஹெட்டியை அடுத்து புதன்கிழமை சிலியை எதிர்கொள்கிறது. முறையே 'A' மற்றும் 'B' பிரிவிலிருந்து தகுதிச் சுற்றுகளை தீர்மானிக்கிறது.

பீபா மகளிர் உலகக் கிண்ண வரலாற்றில் தகுதியை நிர்ணயம் செய்ய பிளே-ஓவ் போட்டி நடத்தப்படுவது இதுவே முதல் முறை.

குரூப் பி: அவுஸ்திரேலியா, அயர்லாந்து, நைஜீரியா, கனடா.

குழு சி: ஸ்பெயின், கோஸ்டாரிகா, ஸாம்பியா, ஜப்பான்.

குழு டீ: சீனா, இங்கிலாந்து, டென்மார்க், குரூப் பி பிளே ஓவ் வெற்றி

குழு ஈ: அமெரிக்கா, வியட்நாம், நெதர்லாந்து, குரூப் 'ஏ' பிளே-ஓவ் வெற்றி

குரூப் எவ்: பிரான்ஸ், ஜமைக்கா, பிரேஸில், குரூப் சி பிளே ஓவ் வெற்றி

குரூப் ஜி: சுவீடன், தென்னாபிரிக்கா, இத்தாலி, ஆர்ஜென்ரீனா

குழு எச்: ஜேர்மனி, மொரோக்கோ, கொலம்பியா, தென் கொரியா

## நுவரெலியாவில் நடைபெற்ற மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி



(செ.திவாகரன்)

நுவரெலியா மூன்பிலேன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அணிக்கு 11 பேர் கொண்ட 22 அணிகள் உருவாக்கப்பட்டு குறித்த அணிகளுக்கு இடையில் கிரிக்கெட் மென்பந்து சுற்றுப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் முதலாவது வெற்றிக் கிண்ணத்தை ராகல ஜக்வார் அணி தட்டிச்சென்றது. வெற்றிபெற்ற அணிக்கு நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் ராமையா கேதீஸ் வெற்றிக்கிண்ணத்தை வழங்கினார்.

# பிரபல நகைச்சுவை நடிகர் மயில்சாமி காலமானார்



தென்னிந்திய சினிமாவின் பிரபலமான நகைச்சுவை நடிகர் மயில்சாமி (வயது 57) சென்னையில் காலமானார். சென்னை, சேலம்பாக்கத்திலுள்ள சிவன் கோயிலில் நேற்றுமுன்தினம் சாமி தரிசனம் செய்துவிட்டு வீடு திரும்பியபோது மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். வரும் வழியில் அவரது உயிர் பிரிந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

தாவணிக் கனவுகள், கன்னி ராசி போன்ற படங்களில் சிறு வேடங்களில் நடித்தவர். கமலின் அபூர்வ சகோதரர்கள் படத்தில் மெக்கானிக் கமலின் நண்பராக நடித்து வெளிச்சம் பெற்றார். அதன்பின் நூற்றுக்கணக்கான படங்களில் நகைச்சுவை கதாபாத்திரங்களில் நடித்து அசத்தினார். ரஜினி, கமல் தொடங்கி இன்றைய இளம் நடிகர்கள் வரை ஏராளமான நட்சத்திரங்களுடன் நடித்துள்ளார். கடைசியாக தான் நடித்த கிளாஸ்மேட்ஸ் படத்தின் டப்பிங் பணியை கூட முடித்துவிட்டு வந்தார்.

ஏற்கனவே இதய அறுவை சிகிச்சை பெற்றுள்ள இவருக்கு கடந்த டிசம்பரில் மாரடைப்பு ஏற்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். இந்நிலையில், இவரின் திடீர் மறைவு திரையுலகினர், ரசிகர்கள் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# 12 நாட்களின் பின்னர் இருவர் துருக்கியில் உயிருடன் மீட்பு!

## உயிரிழப்பு எண்ணிக்கை 46 ஆயிரத்தைக் கடந்தது

அதி சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி துருக்கி, சிரியா ஆகிய நாடுகளில் 46 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், பன்னிரு நாட்களின் பின்னர் இருவர் இடிபாடுகளிலிருந்து உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

கிர்கிஸ்தான் பகுதியில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் சமீர் மொஹமட் அஸார் (வயது 49), ரக்டா (வயது 40) ஆகிய தம்பதியினரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்களுடைய 12 வயது மகன் நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, நிலநடுக்கம் ஏற்பட்டு 11 நாட்களின் பின்னர் மூவர் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களில் முஸ்தபா அவ்சி என்ற (வயது 34 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தையும் ஒருவராவார். குழந்தை காப்பாற்றப்பட்டுள்ள நிலையில் தாயாரும் குழந்தையும் தந்தையிடம் நெருங்கியிருக்கும் காட்சி இணையத்தில் வெகுவாகப் பகிரப்பட்டு வருகிறது.

"நான் முழு நம்பிக்கையையும் இழந்திருந்தேன். உண்மையில் இது ஓர் அதிசயம்'' என அவ்சி தெரிவித்துள்ளார்.

உலக செய்திகள்

# வடகொரியாவால் மீண்டும் பிராந்தியத்தில் பதற்றம்

வடகொரியா தன்னிடம் இருக்கும் அணு ஆயுதங்களைக்கொண்டு பிராந்திய எதிரி நாடுகளான தென்கொரியா மற்றும் ஜப்பானை நீண்டகாலமாக அச்சுறுத்தி வருகிறது.

மேலும், அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பகிரங்கமாக பல்வேறு ஏவுகணை சோதனைகளையும் வடகொரியா நடத்தி வருகிறது.

இந்நிலையில், வடகொரியா ஏவிய ஏவுகணை, ஜப்பானின் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் விழுந்துள்ளதாக ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஏவுகணை கிழக்கு கடற்கரையிலிருந்து ஹொக்கைடா மாகாணத்தின் மேற்கு ஒஷிமா தீவு அருகே விழுந்ததாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ள தகவலின்படி, அதிகாலை 5.21 மணிக்கு ஏவப்பட்ட ஏவுகணை, 66 நிமிடங்கள் வானில் பறந்து 6.27 மணிக்கு கடலில் விழுந்ததாகவும், சுமார் 200 கிலோ மீற்றர் தொலைவு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணை சோதனையானது வடகொரியாவின் எதிர்த்தாக்குதல் திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எனவும், கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் வகையிலான ஏவுகணை முழு திறனை எட்டியிருப்பது உறுதியாகி இருப்பதாகவும் வடகொரிய அரசின் உயர்மட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மாணவர்களின் தயாரிப்பில் உருவான ரொக்கெட் விண்ணில் ஏவப்பட்டது

## இந்தியாவின் முதலாவது ஹைபிரிட் பரிசோதனை



இந்தியாவின் முதல் ஹைபிரிட் ரொக்கெட் நேற்றுக் காலை 8.15 மணிக்கு செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்திலுள்ள பட்டிபுலம் கிராமத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.

ஹைபிரிட் சவுண்ட் ரொக்கெட் எனப்படுவது குறைந்த உயரத்தில் செலுத்தக்கூடியதாகவும், சோதனை ஓட்டத்திற்கு பயன்படுத்துவதற்காகவும் செயற்கைகோள்களின் தரவுகளை சேகரிப்பதற்காகவும் அனுப்பப்படுகிறது.

விண்ணில் செலுத்தப்பட்டுள்ள ஹைபிரிட் சவுண்ட் ரொக்கெட் சுமார் 2.4 கி.மீ. உயரம் வரை செல்லக்கூடியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரொக்கெட்டில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அரச பாடசாலை மாணவர்கள் மூவாயிரத்து 500 பேர் இணைந்து தயாரித்த 150 சிறிய ரக செயற்கைகோள்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன.

இந்தியாவின் முதல் ஹைபிரிட் சவுண்ட் ரொக்கெட் இதுவாகும். இந்த நிகழ்வில் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், இஸ்ரோ விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை ஆகியோர் கலந்துகொண்டு ரொக்கெட் விண்ணில் ஏவப்படுவதை நேரடியாக பார்வையிட்டனர்.

இந்தச் சிறிய ரக செயற்கைகோள்கள் மூலம் வானிலை, கதிர்வீச்சு தன்மை, வளிமண்டல நிலை உள்ளிட்ட பல்வேறு தரவுகளைப் பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் மம்மியின் உண்மை அம்பலம்




ஜப்பானில் உயிர்காக்கும் கடவுள் என வழிபடப்படும் மம்மியின் உண்மைத்தன்மையை விஞ்ஞானிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.

மனித முகத்தை ஒத்த தோற்றத்துடனும் மீன் வாலை ஒத்த கால் பகுதியிடனும் இந்த மம்மி 1736-1741 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் ஜப்பானிய தீவான ஷிகோகுவுக்கு அருகில் பசுபிக் பெருங்கடலில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மம்மி தற்போது அசாகுச்சி நகரிலுள்ள ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த மம்மி மீன் பாகங்களால் அலங்கரிக்கப்பட்ட துணி, காகிதம், பருத்தி ஆகியவற்றால் புனையப்பட்டுள்ளதாக தற்போது விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மம்மியை அந்நாட்டு மக்கள் உயிர்காக்கும் கடவுளாக வணங்கி வருகின்றனர். மேலும், கொவிட் - 19 தொற்றுக் காலப்பகுதியில் பெரும்பாலான மக்களால் வணங்கப்பட்டது.

மம்மியின் மேல் பாகம் குரங்கு போலும் கீழ் பாகம் மீன் போலும் காட்சியளித்தாலும் அது பாலூட்டியல்லவென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



உட்புற எலும்புக்கூடு எதுவும் கண்டறியப்படவில்லை. கழுத்தின் பின்புறம் மற்றும் உடலின் கீழ் பகுதிகளில் உலோக ஊசிகள் உள்ளதாக ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7